தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 13 சுகந்தம் : 45 (சித்திரை - ஆனி) 2020

13ஆவது ஆண்டில்...

100/=

கவிக்கோ வெல்லவூர்க்கோபால்

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

ரூபா. 86,000 ஐச் செலுத்தி

YAMAHA
Revs Your Heart

மோட்டார் சைக்கிள் ஒன்றை கொண்டு செல்லுங்கள்



03 FREE

FREE

FREE

568A, Trinco Road, Batticaloa. 065 2227333, 077 4650754, 077 6328484, 0773268484, 077 9868484, 076 6604848

காட்சிகூடம் காவடிச்சேனை 065 225 888, ஏறாவூர் 076 911 1652, கொக்கட்டிச்சோலை 077 497 8484, மட்டக்களப்பு 077 332 2570

மாபெரும் விலைக் கழிவுக் கொண்டாட்டம்

ரூபா. 50,000 ஐச் செலுத்தி

Scooter ஒன்றினை கொண்டு செல்லுங்கள்

64 YEARS

YAMAHA
Revs Your Heart

YAMAHA PLAZA
Sales, Service & Spare Experts

AD / 0045

568A, Trinco Road, Batticaloa. 065 2227333, 077 4650754, 077 6328484, 0773268484, 077 9868484, 076 6604848

காட்சிகூடம் காவடிச்சேனை 065 225 888, ஏறாவூர் 076 911 1652, கொக்கட்டிச்சோலை 077 497 8484, மட்டக்களப்பு 077 332 2570

ஆரம்பம் : 06.04.2008

தென்றல்
THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே : 077 – 6983597
பெக்ஸ் : 065 – 2227542
Email : kirupabatticaloa@yahoo.com
இணையம் : www.thendralbook.com

ஆசிரியர்
க. கிருபாகரன்

ஆசிரியர் குழு
கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி. கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்
செல்வி. த.செல்வராணி

ஓவியம்
சி.புரவர்த்தனி

கணினி வடிவமைப்பு
சு. தீபன்

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ–ர்)

13ஆவது ஆண்டில் உங்கள் "தென்றல்"

இன்று (06.04.2020) நாம் புதிதாய்ப் பிறந்ததாய் உணர் கிறோம். எத்தனையோ தடைகள், பல சிறப்பான விமர்சனங்கள், வழிகாட்டல்கள், தட்டிக் கொடுப் புக்கள், பாராட்டுக்கள்! இத்தனை யும் கடந்து, நீங்கள் வாசித்து நேசிக்கும் தமிழினத்தின் தனித் துவச் சஞ்சிகையாக உங்கள் "தென்றல்"– நிமிர்ந்து நிலைத்து நிற்பதில் மகிழ்கிறோம்.

எம்மோடு உறவு பாராட்டுவ தினும், எம்மை உளமார நேசிப் பதிலும் முன்நிற்கும் எம் மேலான வாசகர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

உங்கள் செல்லக் குழந்தை "தென்றல்"–12 ஆண்டுகளைச் சிறப்பாக நிறைவு செய்து 13ஆவது ஆண்டில் தடம் பதிக்கிறது.

இந்தப் பயணம் எளிதாக கை கூடியதொன்றல்ல. எண்ணற்ற இடர்களுக்கும், சமூக முரண் பாடுகளுக்கும் மத்தியில் வாசகப் பெருமக்களின் ஆசிகளே எமக் குத் துணையாக நின்றுள்ளன. அவர்களே இத்தனை கால வளர்ச் சிக்கும் முழுமுதற் காரணமா கின்றனர் எனக் கூறினால் அது மிகையாகாது.

"தென்றல்"– பல்சுவை குடும்பச் சஞ்சிகையாக பரிணமித்து, இன்று தமிழர் தேசமெல்லாம் மனங்கவர் சஞ்சிகையாகப் பவனி வருகிறது.

இந்த 12 வருடகாலப் பயணத்தில் எம்மோடு கைகோர்த்து நின்ற வாசகர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், விளம்பரதாரர்கள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுறவுப் பணியாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் அன்புடன்
- ஆசிரியர் -

தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

இலங்கை

ஓராண்டு கட்டணம்	500/=	US$20
ஆயுள் கட்டணம்	4000/=	US$100

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

விளம்பரக் கட்டணம்

பின்அட்டை வெளிப்புறம்	2500/=	1000/=
முன் அட்டை உட்புறம்	1500/=	750/=
பின் அட்டை உட்புறம்	1500/=	750/=
உட்பகுதிகள்	1000/=	500/=

அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக் கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு

- க. கிருபாகரன் -

தென்றலின் தேடல்

-கவிக்கோ வெல்லவூர்க் கோபால் -

மனித வாழ்வு பல விசித்திரமான வடிவங்களைக் கொண்டிருந்தாலும் மறுபுறத்தில் அது தன்னையொரு நம்பிக்கையின் அடையாளமாகவே வளர்த்துக் கொள்கிறது. இத்தன்மையில் இன்று நம்மத்தியில் தன்னையொரு பல்துறைசார் கலை இலக்கியப் படைப்பாளியாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் கவிக்கோ வெல்லவூர்க்கோபால் எனப்படும் இலங்கையின் தேசியக் கலைஞர் சீனித்தம்பி கோபாலசிங்கம் அவர்களைத் "தென்றலின் தேடல்" வாயிலாக வெளிக்கொணர்வதில் "தென்றல்"– பெருமையும் பேருவகையும் அடைகிறது. நீள்வாவி தாலாட்டும் நிலமடந்தையெனப் போற்றிப் புகழப்படுவது மட்டு நந்நாடு. மட்டக்களப்பு மாநகரத்தின் தென்கோடியில் முப்பத்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் சுமார் மூவாயிரம் ஏக்கர் பச்சை வயலால் மூடிக் கிடக்கும் மருத நிலப் பதியே வெல்லாவெளி எனும் பழந் தமிழ்க் கிராமம். கி.மு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டே தமிழ்மொழி வழக்கிலிருந்தமையை தனது குடைவரைக் கல்வெட்டு மூலம் உலகெலாம் பறைசாற்றிக் கொண்டிருக்கும் பெருமையைப் பெற்றது இது. சோழராட்சிக் காலத்தில் கட்டப்பட்ட நாதன் அணையை மையப்படுத்தி நாதனையென்ற வரலாற்றுப் பெயரை இன்றும் கொண்டிருப்பதும் இதன் சிறப்பியல்பாகும். பிற்பட்ட காலத்தில் நாதனை வன்னிமையும் இதனையே தலைமையிடமாகவும் கொண்டிலங்கியது.

இக்கிராமம் அளித்த காலக் கொடையே வெல்லவூர்க் கோபால். இவர் சீனித்தம்பி -கெங்கம்மா தம்பதியின் இளைய புதல்வனாக 07.11.1947ல் பிறந்தார். கணபதிப்பிள்ளை, சண்முகம்,

நாராயணபிள்ளை, சதாசிவம், பரிமளா ஆகிய சகோதரர்கள் இவருக்கு முன்னோராவர். இவருக்கு பெற்றார் இட்ட பிள்ளைப் பெயர் கோபாலசிங்கம் ஆகும். எனினும் "கோபால்" என்ற பெயரே இவருக்கு அன்றுமுதல் இன்றுவரை நிலைபெறலாயிற்று. கோபால் பிறந்து ஒருசில மாதங்களில் தந்தையார் இறந்துவிட தாயாரின் அரவணைப் பிலேயே இவர் வளர வேண்டியதாயிற்று.

கல்வி

- இவர் தனது ஆரம்பக் கல்வியை வெல்லாவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் மேற்கொண்டார். இங்கு ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றார்.
- தனது இடைநிலைக் கல்வியை வந்தாறுமூலை அரசினர் மத்திய கல்லூரியில் பயின்றார். வந்தாறுமூலை அரசினர் மத்திய கல்லூரி யில் பயின்ற காலம் அவரது கல்வித் துறையிலும், கலை இலக்கிய மற்றும் விளையாட்டுத் துறையிலும் தடம் பதிக்க பெரும் வாய்ப்பினை நல்கிய காலமாகவே அமைந்தது. 1963 டிசம்பரில் க.பொ.த. (சாதரணம்) விஞ்ஞானப் பிரிவில் ஏழு திறமைச் சித்திகளுடன் எட்டுப் பாடங்களிலும் சித்திபெற்றார்.
- மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கற்றார்.
- கொழும்பு கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் வெளிவாரி மாண வனாக இணைந்து (1971-1972) கணக்கீட்டுப் பயிற்சிநெறிச் சான் றிதழைப் பெற்றுள்ளார்.

தொழில்

- 1967ல் மலையகச் கல்விச்சபை நடாத்திய பரீட்சையில் தேறிய கோபால் கண்டி - கலகாப் பகுதி மலையகப் பாடசாலையொன்றில் கணித, விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்றார். ஆரசியல் சூழ்நிலை காரணமாக சில காலங்களில் அப்பதவியிலிருந்து வில கினார்.
- அதன்பின்னர் 1968ல் நடைபெற்ற உள்ளூராட்சி செயலாளருக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்திபெற்று, மட்டக்களப்பு மாநகராட்சி மன்றத்தில் நியமனம் கிடைத்தது.
- அங்கு கூடுதல் பொறுப்பாக மட்டக்களப்பு மாநகர பௌர்ணமிக் கலைநிகழ்ச்சிப் பொறுப்பாளராகவும் மாநகர வானொலிச் செய்தியா ளராகவும் பணிபுரியும் வாய்ப்பும் இவருக்கு வழங்கப்பட்டது.
- 1973 – 1974 காலப் பகுதியில் கல்முனை பட்டின சபையின் கணக் கீட்டுப் பகுதியில் கடமையாற்றிய காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டு கொழும்பு உள்ளூராட்சிப் பயிற்சி நிலை யத்தில் பயிற்சிபெறும் வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது.

- 1975 – 1980 காலப்குதியில் மண்முனை தென்கிழக்கு எருவில் கிராமாட்சி மன்றத்தில் பிரதம எழுதுனராகப் பணியாற்றினார்.
- 1981ல் மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டபோது மாவட்ட நிருவாகப் பயிற்சிநெறியை கொழும்பு உள்ளூராட்சிப் பயிற்சி மன்றத்தில் மேற் கொண்ட கோபால் மட்டக்களப்பு மாவட்டசபை அலுவலகத்தில் (கச்சேரி) தனது பணியினை மேற்கொண்டார்.
- 1983ல் காத்தான்குடி பட்டின சபை கலைக்கப்பட்டு சில குறைபாடுகள் காரணமாக அதன் முக்கிய அலுவலர்கள் பணியில் இடைநிறுத் தப்பட்டபோது அங்கு குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தராக (Speci fied Officer) நியமிக்கப்பட்டு பலரது பாராட்டுதலையும் பெற்றார்.
- அதனைத் தொடர்ந்து நவகிரிநகர் உள்ளூராட்சி மன்றத்தின் அதி காரம் அளிக்கப்பட்ட அலுவலராக (Authorised officer) நியமிக் கப்பட்ட இவர் அதனைத் தொடர்ந்து 1990 வரை போரதீவுப்பற்று பிரதேச சபையின் செயலாளராகப் பொறுப்பிலிருந்தபின்னர். போர்க் காலச் சூழலால் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி கொழும்பில் சிலமாதங்கள் வாழ்ந்தபின்னர் 1991 ஜனவரியில் குடும்பத்துடன் தமிழகம் சென்றார். அங்கு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அகால மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பாதிப்புகளினால் சில மாதங்களின் பின்னர் நாடு திரும்பினார்.
- 1991 ஜூனில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இணைந்து 1997 வரை வெளிவாரி கற்கை நெறிப்பிரிவின் விஞ்ஞானப் பகுதியின் இணைப்பு அலுவலராகவும் பல்கலைக்கழக அறிக்கைகளின் தமிழ் மொழி பெயர்ப்பாளராவும் பணியாற்றிய பின்னர் மீண்டும் குடும்பத்துடன் தமிழகம் சென்றார்.
- 2004 டிசம்பரில் நாடு திரும்பிய இவர் தற்போது மனுவேதா வெளி யீட்டகம் மூலம் நூல்களை வெளியிட்டு வருகின்றார்.

மணவாழ்க்கை

கோவில் போரதீவைச் சேர்ந்த யோகேஸ்வரியைத் தனது வாழ்க் கைத் துணையாகக் கொண்டு இரு புதல்விகளையும், இரு புதல் வர்களையும் பெற்றெடுத்தனர்.

கலை இலக்கியப் பணிகள்

இவர் தொடக்கக் கல்வியை மேற்கொண்ட போதே கிராமத்தில் பாடப்படுகின்ற கூத்து, கும்மி, வசந்தன், சிந்து, தாலாட்டு, அகவல் என பலதரப்பட்ட பாடல்களையும் தனது தாயாரூடாக கேட்டும் படித்தும் பாடி மகிழ்ந்தவர். இவற்றின் ஆழ்மனப் பதிவுகளின் வெளிப்பாடே அவரது கலை இலக்கியப் பணிகளுக்கு உந்து சக்தியாக அமைந்தது.

எழுத்துலகப் பிரவேசம்:

- வெளியுலகால் அறியப்பட்ட இவரது எழுத்துலகப் பிரவேசம் இவரது 14வது வயதில் 'எனது கிராமம்' எனும் தலைப்பில் வீரகேசரி மாணவர் மஞ்சரிக்கு எழுதியதிலிருந்து ஆரம்பிக்கின்றது.
- இதனைத் தொடர்ந்து 1960 காலப்பகுதியில் கோபால் வீரகேசரி, தினகரன், சுதந்திரன், தமிழ் முரசு, புதினம் போன்ற பத்திரிகைகளில் கவிதைகளை எழுதத் தொடங்கினார்.
- உயர்தர வகுப்பைத் தொடர்வதற்காக 1963ல் இவர் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் இணைந்துகொண்டதும் இவரது கலை இலக்கிய வளர்ச்சிக்கு அது பெருவாய்ப்பினை அளித்தது.

எழுதி வெளியிட்ட நூல்கள்

- தனது பதினெட்டாவது வயதில் 'கன்னிமலர்' கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.
- சாதீயத்திற்கு எதிராக எழுதிய 'முல்லை' குறுங்காவியம் 1968 ஜூலையில் வெளியிடப்பட்டது.
- இதன்பின்னர் 1972ல் சாதீயத்தின் கோரப்பிடியில் அகால மரணத்தை தழுவிய தனது நண்பனின் வாழ்வியலை பின்புலமாகக் கொண்டு எழுதிய மகாகவியின் வாழ்த்துரையோடு கூடிய **'ஒரு கண்ணீர்க் காவியம்'** வெளிவந்தது.
- அதனைத் தொடர்ந்து தலவரலாறு மற்றும் இசைப் பாடல்களுடன் கூடிய **'கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்'** விபுலத்தின் வெளியீடாக வெளிவந்தது.
- **'இதயசங்கமம்', 'நெஞ்சக் கனல்'** ஆகிய இரு கவிதை நூல்கள் தமிழகத்தில் வெளிவந்தன.
- 2003ன் பிற்பகுதியில் விபுலத்தின் வெளியீடாக **"தமிழக வன்னியரும், ஈழத்து வன்னியரும்"** நூல் வெளியிடப்பட்டது.
- விபுலத்தின் இலவச வெளியீடாக 2005 பெப்ரவரியில் வெளிவந்த **'சுனாமி ஒரு மீள்பார்வை'**. எனும் நூல் வெளியிடப்பட்டது.
- 2009 இல் வெளியிடப்பட்ட பேராசிரியர் மா.செல்வராஜா **"மணிவிழா சிறப்புமலர்"**
- 2009ல் **"வெல்லவூர்க் கோபால் கவிதைகள்"**
- 2009ல் **"முழுமை பற்றிய சிந்தனைகள்"**

இலங்கையின் ஆற்றல்மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய- சஞ்சிகை- இசை- நாடக- நாட்டிய- கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகஞ் செய்யும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"**- எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- 2010ல் "கண்ணீரால் எழுதுகின்றேன்"
- 2011ல் "கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள்"
- 2012ல் "வெல்லாவெளி வரலாறும் பண்பாடும்"
- 2015 இல் "அமரர் வ. நல்லையாவின் நினைவு மலர்"
- 2016ல் "மட்டக்களப்புத் தேசம் வரலாறும் வழக்காறும்"
- 2017ல் "பிரபஞ்சமும் வாழ்வியலும்
- 2018ல் கண்ணகி வழிபாடு பார்வையும் பதிவும்"
- 2019ல் "வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் தலவரலாறும்"
- 2019ல் "வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன் இசைப்பாடல்கள்" என்ற ஒலிப்பேழை.

அரங்க நிகழ்வுகள்

சமர்ப்பித்த முக்கிய ஆய்வுக் கட்டுரைகள் (1990க்குப் பிற்பட்டவை)

1. மட்டக்களப்புப் பிரதேசச் சிறப்பை விளக்கும் "கூரை முடிகள்" -சாகித்திய விழாமலர்- 1993
2. "மட்டக்களப்புப் பண்பாட்டுக் கோலங்கள்" -8வது தமிழாராய்ச்சி மாநாடு 1994 - (தமிழ்நாடு)
3. "அமரர் நல்லையாவின் தூரநோக்கு" - வந்தாறுமூலை மத்திய கல்லூரி பொன்விழா மலர் -1996
4. "பொன் விழாக் காணும் வந்தாறுமூலை மத்திய கல்லூரி ஒரு சிறப்புப் பார்வை" - தினகரன் -1996
5. "கலித்தொகைக் காட்சிகள்" - தினபூமி (தீபாவளி மலர்) 1998 , தமிழ் நாடு

6. "தமிழக ஈழ சமூகங்களின் விரிவாக்கம்" - பூபாளம் 2001 (கொங்குநாடு கலாசார ஒன்றியம்), தமிழ்நாடு
7. "விபுலானந்தரும் தமிழ்த் தேசியமும்" - விபுலம் (விபுலானந்த விழா மலர்) கனடா 2003
8. "மட்டக்களப்புப் பிரதேச திருப்படைக் கோவில்கள்" - 2வது உலக இந்து மாநாட்டு மலர் -2003
9. "மட்டக்களப்புப் பிரதேச ஆட்சியாளர்கள்" - மருதம் 2004, போரதீவுப் பற்றுக் கலாசாரப் பேரவை
10. "மட்டக்களப்புச் சமூகங்களும் அவற்றின் விரிவாக்கமும்" - தேனகம் 2005, மட்/ம.வ கலாசாரப் பேரவை
11. "இது எங்களின் கதை" - விழுது, வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய அமுதவிழா மலர் -2008
12. "கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியம்" - பட்டிப்பளை கலாசாரப் பேரவை மலர்
13. "வவுணதீவுப் பிரதேசத்தின் மறக்கப்பட்ட பெருமைகள்" - அகழி, வவுணதீவு கலாசாரப் பேரவை-2008
14. "மட்டக்களப்பு மாநிலத்தில் கண்ணகி வழிபாடு சிறப்புப் பார்வை" - தாந்தா மலைமாட்சி- 2011
15. "மண்முனை வடக்குப் பிரதேசத்தில் – அறியப்பட்டதும் அறியப்படாததும்" தேனகம் - 2011
16. "மட்டக்களப்புத் தேசத்தில் கலிங்கச் செல்வாக்கு"- கொக்கட்டிச்சோலை கும்பாபிஷேக மலர்- 2012
17. "மண்முனை வடபிரதேச ஆட்சிமுறைகள்"- தேனகம்- 2012
18. வித்துவான் பெரெத்தினம் அவர்களின் "வாழையடி வாழை– பார்வையும் பதிவும்" - தமிழ் ஒளி, கனடா -2014
19. "கிழக்கின் சமூக அமைப்பும் இராமகிருஷ்ண மிசனும்" - ஜீவனானந்தம் - 2012
20. "மட்டக்களப்புத் தேசத்தின் சமூகத்தளம் – தொடர் கட்டுரைகள் (முத்துக் கமலம், மின்னிதழ்- 2015,2016
21 "மட்டக்களப்புத் தேசத்தில் நிலையற்ற சேரநாட்டு வழக்காறுகள்" - மின்னிதழ், ஜூலை 2016, உலகத் தமிழ்ச்சங்கம், தமிழக அரசு.
22. "பல ஆய்வுக் கட்டுரைகள்" - வெற்றி நியூஸ், 2015, 2016,2017

கருத்தரங்கு உரை
(1990க்குப் பிற்பட்ட முக்கியமானவை)

1. **"மட்டக்களப்புப் பிரதேச பண்பாட்டுக் கோலங்கள்"** –வாசகர் வட்டம், மட்டக்களப்பு – 1995.
2. **"நீலாவணனின் கவிதை ஆளுமை"** – விபுலம், மட்டக்களப்பு – 1996.
3. **"மட்டக்களப்பின் திருப்படைக் கோவில்கள்"**- 2வது உலக இந்து மாநாடு, மட்டக்களப்பு- 2003.
4. **"கிழக்கிலங்கையும் இராமகிருஷ்ண மிசனும்"** - கொழும்பு இராம கிருஷ்ன சங்கப் பவள விழா- 2006.
5. **"கிழக்கிலங்கை இலக்கியங்கள்"** - கிழக்குமாகாண சாகித்திய விழா, கல்முனை - 2008.
6. **"மட்டக்களப்பு சஞ்சிகைகள் பற்றிய ஆய்வு"** – மட்/எழுத்தாளர் பேரவை, நூலகக் கேட்போர் கூடம் - 2010
7. **"கண்ணகி நம்பிக்கைகள்"** - கண்ணகி இலக்கிய விழா 2011
8. **"மட்டக்களப்புத் தேசமும் கலிங்கத் தொடர்புகளும்"** உலகத் தமிழ் இலக்கிய மாநாடு, கொழும்பு -2012
9. **"மருமக்க தாயமும் தாய்வழி முதுசமும்"** - தமிழ் ஆவண மாநாட்டுக் கருத்தரங்கு, கொழும்பு -2013
10. **"மட்டக்களப்பில் நிலைபெற்ற சேரநாட்டின் தாய்வழி மரபுகள்"** - பழந்தமிழர் ஆய்வு மாநாடு, யாழ்ப்பாணம் -2016

பயிற்சிப் பட்டறைகள்
கவிதையாக்கம்

1. மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர் களுக்கானது மட்டக்களப்பு இந்துக் கல்லூரி - 2006
2. Workshop on Women's Access and Ownership to Land and Property in Batticaloa, Jaffna and Vanni – Centre for Policy Alternatives - 18th Jan.2005 Batticaloa
3. **"கவிதை மரபும் கவிதையாக்கமும்"** -மட்டக்களப்பு கல்வி வலயம்: 2016

நினைவுப் பேருரை

1. **"புலவர்மணி – ஒரு மீள்பார்வை"** 31வது நினைவுப் பேருரை – புலவர் மணி நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு - 2010

2. "புலவர்மணி ஏ.வெரியதம்பிப்பிள்ளை – காலமும் கருத்தும்" (வாழ் வியலூடான ஒரு பார்வை) 40வது நினைவுப் பேருரை -03.10.2018

பெற்ற விருதுகளும் பாராட்டுகளும்

- 1965 இல் வழாங்கப்பட்ட "சாஹித்திய மண்டல விருது" (மாணவர் பிரிவு)
- 1995 இல் கலாசார அமைச்சு வழாங்கிய "அருள்நெறி விருது".
- 1996 இல் வழாங்கப்பட்ட "கவிதை இலக்கியத்திற்கான சாகித்திய விருது".
- 2000 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் கொங்குநாடு கலாசார ஒன்றியம் வழாங்கிய "கவிக்கோ விருது"
- 2002 ஆம் ஆண்டு தமிழக திருச்சி நுண்கலைக் கல்லூரி வழாங்கிய "சிறந்த கலைஞர் கௌரவம்".
- 2006 ஆம் ஆண்டு மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை வழாங்கிய "சிறந்த ஆய்வாளர் விருது"
- 2006 இல் வழாங்கப்பட்ட "அரச இலக்கியத்திற்கான சாகித்திய விருது"
- 2010 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் அமைச்சு வழாங்கிய "கலாபூஷணம் விருது"
- 2010 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை வழாங்கிய "முதல்வர் விருது"- (ஆய்வு)
- 2010 ஆம் ஆண்டு மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை வழாங்கிய "தேனகக் கலைச் சுடர் விருது".
- மட்டக்களப்பு இலக்கிய அமைப்புக்கள் இணைந்து நடாத்திய மாநகர பெளர்ணமிக் கலைநிகழ்ச்சி அமைப்பாளர் சேவையின் பாராட்டு.
- 2013 ஆம் ஆண்டு வழாங்கப்பட்ட "இலங்கை அரசின் தேசிய கலைஞர் விருது".
- 2017 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு வழாங்கிய "சிறந்த ஆய்வுநூலுக்கான விருது"
- 2017 ஆம் ஆண்டு சிறந்த ஆய்வுசார் படைப்புக்காக வழாங்கப்பட்ட "இலங்கையரசின் தேசியச் சான்றிதழ்"

- 2017 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை நடாத்திய **"சிறந்த வரலாற்று ஆசிரியருக்கான பாராட்டு"**

கௌரவ பதவிகள்

- வெல்லாவெளி கவின்கலைக் கழகச் செயலாளர். (1966 - 1975)
- கிழக்கிலங்கை கவிஞர் ஒன்றிய இணைச் செயலாளர் (1970 – 1982)
- மாநகர வானொலிச் செய்தியாளர். (மாகாணச் செய்திகள்) (1971- 1975)
- மட்டக்களப்பு கலைவட்டம் இணைச் செயலாளர். (1971 - 1982)
- மட்டக்களப்பு மாநகர பௌர்ணமிக் கலை நிகழ்ச்சிப் பொறுப்பாளர். (1971 -1973)
- மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கப் பொருளாளர். (1983 – 1996)
- பட்டிருப்புத் தொகுதி அபிவிருத்திச் சபை நிறைவேற்றுக்குழு உறுப்பினர். (1972-1977)
- கோவில்போரதீவு உதயதாரகை கலை விளையாட்டுக் கழகத் தலைவர்.(1975 - 1985)
- இலங்கை தேசிய ஒருமைப்பாட்டு அமைப்பு மாவட்ட இணைப்பாளர். (1974- 1980)
- இலங்கை எழுத்தாளர் பேரவை செயற்குழு உறுப்பினர். (1975 - 1990)
- மட்டக்களப்பு மாவட்ட முதலாவது சர்வதேச சிறுவர் தின நிகழ்ச்சி அமைப்பாளர். (1979)
- இணைந்த வெல்லாவெளி - பட்டிப்பளை பிரதேச சபை தலைவர். (1981 - 1983)
- போரதீவுப்பற்று விளையாட்டுப் பேரவை உப தலைவர். (1981 - 1983)
- புதுவை(இந்தியா) மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி மைய தகவல் சேகரிப்பாளர்.(1997 -2002)
- கோவில்போரதீவு பிரமோதயா கல்வி நிறுவனச் செயலாளர். (1974 – 1990)
- மட்டக்களப்பு விபுலம் வெளியீட்டு நிறுவனச் செயலாளர். (1992 -2014)
- மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினர் (2017 முதல்)

♦ கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடவை உறுப்பினர், (2018 முதல்)

இவ்வாறாக கலை, இலக்கியம், சமூக சேவை, சமயம் எனப் பல்வேறு துறைகளிலும் அகலக்கால் விரித்து, பாரிய இலக்கியப் பணியாற்றி வரும் சிரேஷ்ட கவிஞரும், எழுத்தாளரும், விமர்சகருமான வெல்ல வூர்க்கோபாலின் முயற்சிகள் தங்கு- தடையின்றி நடந்தேற வேண் டுமெனத் "தென்றல்"- இவ்வேளையில் மனம் திறந்து வாழ்த்துகிறது!

அம்மா!

– ஏ.அமானுல்லாஹ், புத்தளம் –

அம்மா...
நீ சுமந்த பிள்ளை நான்
உன் பேச்சும் மூச்சும்
சிரிப்பும் அழுகையும்–என்
மார்புத் தாளில் கவிதையாய்
வடிக்கிறேன்!

நீ வடிக்கும் விழிநீர் சொட்டும்
என் பேனை மையாகிறது
எமது ஊரில் சொந்தப் பட்டியில்
நீ கறந்த பாலை சூடாக்கி மோராக்கி
நீயருந்திப் பாலாக்கி எனக்கூட்டிவிடு!

நான் அருந்தியதெல்லாம்
நீ தந்த பால்தானே
நான் உண்டதெல்லாம்
நீ தந்த உணவைத்தானே!

உன்னைப் பற்றி நானறிவேன்
உன் மடிமீது தலை சாய்வேன்
உன் தாலாட்டில் கண் மூடுவேன்
உன் முகம் பார்த்த பின்னே
எதையும் செய்வேன்!

உன்னால் நான் பெற்ற இன்பம்
கால் துளியும் யாரும் பெறவில்லை
உன் காலடியே எனது சொர்க்கம்
நீயே எனது தெய்வம்!

கைவிசேஷம்!

– கலாபூஷணம் கா.சிவலிங்கம்–

இந்துக்களின் விசேட தினங்களுள் சித்திரை வருடக் கொண்டாட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் கைவிசேஷம் பெற்றுச் கொள்ளும் நிகழ்வு ஒரு சிறப்பம்சமாகும். அதற்குரிய குறிப்பிட்ட சுபநேரத்தில் கைவிசேஷம் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் அவர்களின் பிரதேசத்திலுள்ள செல்வமும், செல்வாக்கும் மிக்க தனவந்தரிடம் செல்வார்கள். ஆலயங்களில் கைவிசேஷம் பெற்றுக் கொள்பவர்களுமுள்ளனர். கைவிசேஷம் கொடுப்பவர்கள் வெற்றிலையிற் பணத்துடன், பாக்கு, பழம், பூ முதலியவற்றையும் சேர்த்து வைத்திருப்பர். பெறுபவர்கள் வந்ததும், அவர்களை வாழ்த்தி, வரவேற்று, அவர்களைச் சுவாமியறைக்குள் அழைத்துச் சென்று, சுவாமியை வணங்கிக் கொண்டு, அதை இரு கைகளாலும் எடுத்து, வழங்கி வைப்பார்கள். பெறுபவர்களும் இருகைகளாலும் அதை

வாங்கி, நன்றி கூறிக் கண்களில் ஒற்றிக் கொண்டு, மகிழ்ச்சியுடன் விடை பெற்றுச் செல்வர். இது ஒரு சம்பிரதாய நிகழ்வாகும்.

அன்று அதிகாலை பட்டாசு வெடிகள், வாண வேடிக்கைகளுடன் விகாரி வருடம் பிறந்தது. இந்துக்களின் இல்லங்களில் புதுவருடக் கொண்டாட்டம் களைகட்டியது. வினாயகத்தின் வீடும் அதற்கு விதிவிலக்கல்ல. அங்குள்ள பிரமுகர் கணபதிப்பிள்ளை ஐயாவிட மிருந்து கைவிசேஷம் பெறுவது வினாயகத்தின் வழக்கம். அவரிட மிருந்து கைவிசேஷம் வாங்கிய பின்னர்தான் அவர் கைநீட்டி எதையும் எவரிடமிருந்தும் பெற்றுக் கொள்வார். அன்றும் காலையில் வழக்கம் போல் கோப்பியைக் கொண்டு வந்து மனைவி கொ டுத்ததும், அதைக் கைநீட்டி வாங்காமல், மேசையில் வைக்கும்படி கூறினார். மனைவி மேசையில் வைத்ததும், எடுத்து, ஊதியூதிப் பருகி விட்டுக் கிணற்றடிக்குச் சென்றார். அங்கு தலைக்கு மருத்து நீர் வைத்து, முழுகிய பின் வேட்டியை உடுத்திக் கொண்டு, அங்குள்ள பிள்ளையார் கோவிலுக்குச் செல்ல ஆயத்தமானார்.

மனைவி காலையிற் சமைத்த பாற்சோற்றுடன், கட்டைச் சம்பலும் தயா ரித்து, பீங்கானில் வைத் துக் கொண்டு வந்ததும், **"கணபதிப்பிள்ள ஐயாட்டப் போய் கைவிசேஷம் வாங்கினத்துக்குப் பிறகுதான் எதையெண்டான கைநீட்டி வாங்குவன் எண்டு தெரியாதா உனக்கு"**- என்று வினாயகம் கூறியதும், மனைவி அதை மேசையில் வைத்து விட்டுச் சென்றாள். வினாயகம் கைவிசேஷம் வாங்குவதற்கு ஆயத்த மாகும் போது, அவரது கடைசிப் பையன் ஓடி வந்து, **"அப்பா! கண்ணாடிய விட்டு– த்துப் போறீங்களே"**- என்று கூறிக் கொண்டு கண்ணாடியை நீட் டியதும் **"ஒண்டா மனே மறந்து வெயிற்றன்டா. அதக் கதிரையில வை. நான் எடுக்கிறன்"**- என்று சொல்லப் பையன் அதைக் கதிரையில் வைத்ததும், அதைக் கண்ணில் எடுத்து மாட்டிக் கொண்டு, **"கோவி லுக்குப் வெயிற்று வந்துதான் கணபதிப்பிள்ள ஐயாட்டப் போகணும்"**- என்று நினைத் துக் கொண்டு கோவிலுக்குச் சென்றார்.

வினாயகம் ஒரு தீவிர முருகபக்தர். வெளியிலுள்ள கிணற்றடியில் போய் கை, கால்களைக் கழுவிக் கொண்டு பிள்ளையார் ஆலயத்

தினுட் பிரவேசித்தார். கொண்டு சென்ற கற்பூரத்தை உரிய இடத்தில் வைத்துக் கொளுத்திவிட்டு, திருநீற்றையும் மூன்று விரல்களால் எடுத்து, நெற்றியிற் பூசிக் கொண்டு பிள்ளையாரை வழிபட்டார். பின் கோவிலை வலம் வந்து கொண்டு, இடது பக்கப் பின் மூலையி லுள்ள முருகப் பெருமானின் ஆலயத்திற்கு முன்னால் வந்து நின்றார். அதே நேரம் சிறுமியொருத்தி ஓடி வந்து, ஒரு கற்பூரக் கட்டியை நீட்டி, **"இதையும் வச்சிக் கொள்ளுங்க.. ஐயா..!"**- என்று கூற, வினாயகமும் அதைக் கைநீட்டி வாங்கிக் கொண்டார்.

அதன் பின் தான் கைவிசேஷத்தின் நினைவு அவருக்கு உதயமா கியது. **"என்னடா இது, மதுரைக்கு வந்த சோதனை"**- என்ற திரைப்பட வசனம் அவரது செவிகளில் ஒலித்தது. கணபதிப்பிள்ளை ஐயாவிடம் கைவிசேஷம் வாங்கு முன் முருகப்பெருமானிடமிருந்து கற்பூரக் கட்டியைக் கை விசேடமாகப் பெற்றுக் கொண்டதைப் பெரும் பாக்கி யமாகக் கருதினார். கற்பூரக் கட்டியைத் தந்தது சிறுமியல்ல, முருகனே என்று முருகனின் திருவிளையாடலை நினைத்துப் பெருமகிழ்ச்சியடைந்தார். கற்பூரக் கட்டியை வைத்துக் கொளுத்தி, மெய்சிலிர்க்க, நின்று துதித்து, வழிபட்டுக் கொண்டு, பூரண திருப் தியுடன் முருகப் பெருமானின் திருவிளையாடலை எண்ணிய வண்ணம் வீடு நோக்கி நடந்தார் வினாயகம். இருப்பினும் உரிய சுபநேரத்தில் கணபதிப்பிள்ளை ஐயாவிடமிருந்தும் கைவிசேஷத் தைப் பெற்றுக் கொள்ள அவர் தவறவில்லை.

மாபெரும் பரிசு மழை கூப்பன் இல – 08

முழுப்பெயர்:-.....

முகவரி:-.....

.....

தொலைபேசி இலக்கம்:-.....

இவ்விதம் 38 ஆவது இதழிலிருந்து 49 ஆவது இதழ் வரை வெளியாகும் கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள். 50 இதழ் வெளியீட்டு விழாவில் மாபெரும் பரிசினை வென்றிடுங்கள்.

குசலான் மலையும் தொல்லியல் எச்சங்களும்!

போள்யேசுகுமார் கிறிஸ்டினா நிரோஜினி
உதவி விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்

வாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட செங்கலடிப் பிரதேசத்தில் செங்கலடி- பதுளை வீதியில் வேப்பவட்டுவான் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்டு ஏறத்தாள மூன்று கிலோமீற்றர் தூரத்தில் குசலான்மலை எனும் பிரதேசம் அமைந்துள்ளது. இப்பிரதேசம் முற்றிலும் இந்து சமயத்தவர்கள் வாழும் பிரதேசமாகும். இங்குள்ள மலைகளில் பல தொல்லியல் அம்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தற்போது காட்டுப் பிரதேசமாகக் காணப்படும் இவ்விடம் முன்னொரு காலத்தில் செறிவான குடியிருப்புக்களைக் கொண்டிருந்தமைக்கான தொல்லியல் அம்சங்களினைத் தன்னகத்தே கொண்டு இன்றும் விளங்குகிறது. இலங்கை வரலாற்றில் இப்பிரதேசத்தின் தொன்மையை வெளிக்காட்டுவதாக அமைகின்ற போதிலும், சில வரலாற்றாசிரியர்களின் கருத்துக்கள் சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் விதத்திலும் அமைந்துள்ளன.

இப்பகுதியில் கருங்கற் தூண்கள், செங்கற்களால் அமைக்கப்பட்ட இருப்பிடங்கள், பழைய கட்டடச் சிதைவுகள், மட்பாண்ட ஓடுகள், அடையாளங் காணப்பட்ட ஏழு தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள், குகைத் தளங்கள் முதலிய மூலாதாரங்களைக் காணலாம். இவற்றின் மூலம் இப்பகுதியில் குடியிருப்புக்களுடன் கூடிய சமயம் சார்ந்த கட்டடங்கள் இருந்தன என்பதனை உறுதிப்படுத்தலாம். பேராசிரியர் பரணவிதான "Inscriptions of Ceylon"- எனும் நூலில் 389, 390, 391, 392, 393, 394, 395 எனும் இலக்கமிடப்பட்டு, குசலான்மலைக் கல்வெட்டுக்களைப் பதிவு செய்துள்ளார்.

தொல்லியல் சான்றுகள்

தென்னாசியாவின் தமிழகம் தவிர்ந்த பல வட்டாரங்களில் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி.நான்காம் நூற்றாண்டு வரை பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. ஆனால்

குசலான்மலையில் கண்டுபிடிக்கப்பட்ட இரு கல்வெட்டுக்களில் தமிழகத்தைப் போல தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பான எழுத்துக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கல்வெட்டு–01

"Uparajha –Naga-pute rajha Abaya nama tasa pute Gamani - Tise name tena Karite sudasane Sagasa" (Inscription of Ceylon 1970 Co.389)

"உபராஜநாவின் மகன் அபய எனும் பெயரால் அரசனானான். அவருடைய மகன் காமினி திசவினால் கடசன– எனும் குகை சங்கத் திற்குத் தானமாக வழங்கப்பட்டது".

இக்கல்வெட்டு தான செய்தியைப் பதிவு செய்துள்ளது. இதில் அரச வம்சம் பற்றிய தலைமுறை தொடர்பான கருத்துக்கள் வெளிப்படு கின்றன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரியதான தமிழகச் சாசனம் ஒன்றிலும் இது போன்று செல்லிரும்பொறை, பெருங் கடுங்கோ, இளங்கடுங்கோ எனும் மூன்று தலைமுறை விபரம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (மூதா – அமணண்ணன் யாற்றூர் செங்காயபன் உறையர் கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங் கோன் மகன் கடுங்கோளாங்கோவாக அறுத்தகல் -ஸ்ரீதர் தி.ஸ்ரீ.2008:69). அனுராதபுர அரசிற்கு வெளியே காணப்பட்ட பல குறுநில அரசுகளில் தமிழ் ஆட்சியாளர்களுடைய குறுநில அரசுகளும் இருந்தன என்பதை ஏற்றுக் கொள்ள முடியும். இலங் கையின் பல்வேறு பாகங்களிலும் கிடைக்கும் பிராமிக் கல்வெட் டுக்கள் பல குறுநில அரசர்கள் இருந்தமைக்குச் சான்றாகும். இக்கல்வெட்டுக்களில் 28 இடங்களில் குறுநிலத் தலைவர்களுடைய தானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை பேராசிரியர் குணவர்த்தன எடுத்துக் காட்டியுள்ளார். (இந்திரபாலா 2006:189,191). **"அனுராதபுர இராசதானி காலத்தில் இலங்கையில் 200 ற்கும் மேற்பட்ட சிற்றரசுகள் காணப்பட்டன. அவை எல்லாம் அனுராதபுரத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன– என்று குறிப்பிட முடியாது. பல சிற்றரசுகள் தன்னிச்சையாகச் செயற்பட்டன"**– எனப் பேராசிரியர் புஸ்பரெட்ணம் குறிப்பிடுகிறார். குசலான்மலையில் காணப்படுகின்ற **"உபராஜ"**– எனும் அரசுரிமை-யைப் பற்றிய செய்தி சிற்றரசு ஒன்றையோ அல்லது குறுநிலத் தலைவர் ஒருவரையோ பற்றியதாகவே அமைந்துள்ளமையினைக் காணலாம். உபராஜ சிற்றரசு நிலையிலிருந்தமையை இக்கல்வெட்டு புலப்படுத்துகிறது.

"கதிர்காம சத்திரிய வம்சத்தவனான பத்து சகோதரர் சந்ததியினர் வெளியிட்ட கல்வெட்டுக்கள் அம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவ் வம்சத்தின் இளையவன் "உபராஜ நாகன்" எனும் பெயரையும் கொண்டிருந்ததை இக்கல்வெட்டு எடுத்துக் காட்டுகிறது". (சிற்றம்பலம் சி.க.1982:107)

இக்கல்வெட்டில் வருகின்ற காமினி எனும் பெயர் ஆராயப்பட வேண்டியதாகும். அனுராதபுர ஆட்சியாளர்களான வட்டகாமினி, துட்டகாமினி போன்ற மன்னர்களினுடைய பெயர்களைக் காண முடிகிறது. ஆனால் அங்கு அரசாண்ட இப்பெயர்களுக்குரியவர்கள் சிங்கள மன்னர்களாவர். குசலான்மலைக் கல்வெட்டில் **"ஹாமினி சிச"**- எனும் தமிழ் மன்னனுடைய பெயர் இடம்பெற்றுள்ளது. அனுராதபுர அரசின் கீழான சிற்றரசாக அமைந்திருந்தமையால், **"ஹாமினி"**- எனும் பெயரிணைப்பும் ஏற்பட்டிருக்கலாம்- எனும் யூகத்துக்கும் வர முடிகிறது. எனவே குசலான் மலையில் மேலாதிக்கம் கொண்ட அரசமுறை பற்றிய விடயங்கள் ஆய்வுக்குட்படும் போது இது தொடர்பான மேலதிக விடயங்கள் வெளிப்படும்.

கல்வெட்டு-02

"Bata Pusabutiya lene sagasa"- (Inscription of Ceylon 1970 No 390)

"ப3த புஸபுதி என்பவனின் குகை சங்கத்திற்குத் தானமாக வழங்கப்பட்டது."

கல்வெட்டு-03

"Manorame lene Bata Gutena Karate sagasa"- (inscription of Ceylon 1970:No.391)

"மனோரம எனும் பெயர் இடப்பட்டதால், அக்குகை ப3த குத்தவினால் சங்கத்திற்குத் தானமாக வழங்கப்பட்டது".

கல்வெட்டு-04

"Bata Devagutaha Butikaha Gapati- Samanaha lene"-(Inscription of Ceylon 1970:No392)

"ப3த தேவகுத்தவின் சகோதரனான குடும்பத் தலைவரான சமனவின் குகை"

கல்வெட்டு–05

".....na.....ta... Parumaka- pute.... Lene sagasa" (inscription of Ceylon 1970:No.393)

"உயர்குலத்தவனான அல்லது இளவரசனான.. மகன்.. சங்கத்திற்கு வழங்கிய குகை"

கல்வெட்டு–06

"Cahanilaya- vasika Asa- Tisaha lene sagasa" (Inscription of Ceylon 1970:No.394)

"வசிப்பிடமான கஹனிலயவிலுள்ள சங்கத்திற்கு மதிப்பிற்குரிய திஸினால் குகை வழங்கப்பட்டது"

கல்வெட்டு–07

"Bata- sudinasa lene sagasa" (Inscription of Ceylon 1970:No.395)

"ப3த கதின்ன என்பவரால் சங்கத்திற்கு தானமாக வழங்கப்பட்ட குகை"

குசலான்மலைப் பகுதியில் சமூகத்தில் காணப்படும் பலதரப்பட்டோர் குகைத்தானங்களை வழங்கியமைக்கான சான்றுகள் கிடைக் கின்றன. இதனூடாக இப்பிரதேசத்தின் சமூக, பண்பாட்டம்சங்கள் வெளிப்படுவதைக் காணலாம். ப3த, பருமக, ஹபதி, பெண்கள் (உபாஷிகை) போன்றோரின் தான செய்திகள் கல்வெட்டுக்களில் பதிவாகியுள்ள தன்மையினைக் காணமுடிகிறது.

இப்பகுதியில் இதுவரை அடையாளங் காணப்பட்ட கல்வெட்டுக்களில் "திஸ", "அபய"– எனும் தமிழ்மொழிக்குரிய பெயர்கள் உள்ளதை தொல்லியல் ஆய்வாளர் க.தங்கேஸ்வரி தனது "கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு"– எனும் நூலினூடாக எடுத்துக் காட்டுகிறார். அம்பாறை மாவட்டத்திலுள்ள "குடுவில கல்வெட்டில் திச"- எனும் தமிழ் வணிகன் பற்றிய கல்வெட்டும், அனுராதபுரத்தில் கிடைத்த "திஸஹ"– என்ற தமிழ் வணிகன் பற்றிய குறிப்பும், தம்புள்ளையி லுள்ள "அபயம்"– எனப் பொறிக்கப்பட்ட கல்வெட்டும் தமிழர்கள் வாழ்ந்தமையை உறுதி செய்கின்றன. ஐம்பதுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் திஸ, திச, திஸ்ஸ, திஸய, திதிஸயஸ என எழுதப்பட்டுள்ளது. இலக்கிய வழக்கிலுள்ள பெயர்கள் கல்வெட்டுக்

களில் மாறி எழுதப்பட்டதற்குத் தமிழக பிராமிக் கல்வெட்டுக்களிலும், இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களிலும் சான்றுகள் இருப்பதால் அதைத் "திசென்"– என்று வாசிப்பதே பொருத்தமானதாகும். இது வடமொழி சார்ந்த பெயராக இருப்பினும், பண்டைய காலத்தில் இப்பெயரில் தமிழர்களும் இருந்ததற்கு பல சான்றுகள் உண்டு. இதற்குத் தமிழ்நாட்டின் அழகன் குளத்தில் கிடைத்த மண்பாண்டத்தில் வரும் "திசஅனத்" என்ற பெயர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். தமிழ்ப் பெயர்களை வகைப்படுத்திய பேராசிரியர் புஸ்பரெட்ணம் "திசென்"– என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

கல்வெட்டில் காணப்படும் "திச"– என்ற பெயர் தமிழருக்குரிய பெயரென்பதும், பண்டைய காலத்திலே குசலான்மலையில் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், இவற்றால் உறுதி செய்யப்படுகிறது. கல்வெட்டில் காணப்படும் "அய"– என்ற பெயரும், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இப் பெயருக்குரியவர்களுள் சிலர் சிற்றரசர்களாகவும், கிராமத் தலைவர்களாகவும், வேறு பலர் தலைவர்களாகவும் இருந்ததைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.இவற்றை விட, இங்குள்ள கல்வெட்டிலே "பருமக, தேவகுத்தன், சுதசென, நாக, ஹாமினி, திஸ, ஹுபதி" போன்ற தமிழ்ப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு தலைவனால் அல்லது தலைவனின் மகனால் பௌத்த சங்கத்தாருக்கு தானம் செய்த குகை எனும் கருத்து வெளிப்படுகிறது. இதனூடாக இக்குகையில் தமிழர்கள் வாழ்ந்தனர் என்பது தெட்டத் தெளிவாகிறது. இம்மலையில் ஒரு கிராமத் தலைவன் அல்லது அரசன் வாழ்ந்தமையும் தெளிவாகிறது.

இலங்கை பிராமிச் சாசனாங்களில் தானமாக வழாங்கப்பட்ட சாசனாங்களில் சில முழுமை பெறாதவை. அவை தானம் கொடுத்தவர், தானம் பெற்றவர், ஆட்சியாண்டு முதலானவற்றை முழுமையாக எடுத்துக் கூறுவதில்லை. மிகச் சுருக்கமாகத் தானம் தொடர்பான செய்தியினை மட்டும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளமையினைக் காணலாம். குசலான்மலையிலுள்ள கல்வெட்டுக்களிலும் இதனைக் காணமுடிகிறது.

குசலான்மலையிலுள்ள 7 சாசனாங்கள் படியெடுக்கப்பட்டு, அவை பௌத்த சமயம் சார்ந்தவை என உறுதிப்படுத்தப்பட்டது. இவை தவிர,

இங்கு காணப்பட்ட ஒரு சாசனம் வாசிக்கப்படவுமில்லை. வெளியிடப்படவுமில்லை. ஆயினும், வாசிக்கப்படாத இச்சாசனம் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் வாசிக்கப்பட்ட போது அது தமிழ்மொழிக்குரிய சிறப்பெழுத்துக்களைக் கொண்டமைந்துள்ளதைக் காணலாம். இதில் **"பண்பாளன்"**– எனும் சொல் உள்ளது. இங்கு**"ன்"**– என்பது தமிழ் மொழிக்குரிய சிறப்பெழுத்து. பௌத்த சமயம் பற்றிக் கூறப்பட்டாலும், இங்கு பௌத்த சமயத்தைப் பின்பற்றிய தமிழர்களே வாழ்ந்துள்ளதை இச்சாசனம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இதனை வலியுறுத்தும் வகையில் வெல்லாவெளிச் சாசனத்தில் காணப்படும் **"பெரும்பாண்"**– என்பது பிராகிருத மொழிச் சாசனங்களில் காணப்படும் ப3ணக என்ற சொல்லுக்குப் பதிலான தமிழ்ச் சொல்லாகும். **"பண்ணோடு பாடுகின்ற பாணனே பண்பாளன்"** (பத்மநாதன் 2013:37) அது பிராகிருத வழக்கிலே ப3ணக என்று சொல்லப்படும் தேரரைக் குறிப்பதற்குப் **"பண்பாளன்"** என்ற தூய தமிழ்மொழித் தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து சாசனங்களையும் பிராகிருத மொழியில் எழுதியவர்கள் பௌத்த தர்மம் பற்றிய பிரதான பகுதியை தமிழ்ச் சொல்லால் குறிப்பிட்டுள்ளனர்.

பௌத்த சமயம் ஆதியில் இலங்கையில் தமிழையும், வேறு மொழியினையும் பேசியவர்களிடையே பரவியதாகும். குசலான்மலையிலிருந்த சங்கத்தார் பெரும்பள்ளி துறவிகள் வாழ்ந்த பள்ளியாக நெடுங்காலம் காணப்பட்டது. அது தமிழரான பௌத்த துறவிகள் வாழ்ந்த பள்ளியென்பதும், தமிழ்ச் சமூகங்களுக்குரிய பள்ளியென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஏனைய தொல்லியல் சான்றுகள்

குசலான் மலை முருகன் ஆலயம்

1930 காலப்பகுதி முதல் முருகவழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்து 1985 இல் கட்டிடம் அமைக்கப்பட்டு, முருகவழிபாடு மேற்கொள்ளப்படுகிறது.

குசலான்மலை பிள்ளையார் கோவில்

ஒரு மரத்தடியில் பிள்ளையார் உருவத்திலான கல்லை வைத்து வழிபட்டு பின்னர், அம்மரத்தினை இணைத்தால் போல் சிறு ஆலயம் அமைக்கப்பட்டு, வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது.

கருங்கல்லிலான நாகசிலை

கருங்கல்லுக்கு நாகத்தினைப் போல் உருக் கொடுத்து, வழிபட்டு வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது. இவ்வழிபாட்டு முறையானது இலங்கையின் பூர்வீக குடிகளான இயக்கர், நாகர் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றிருக்கலாம். எனினும் நாகர்களுடைய பிரதான வழிபாட்டு முறை நாக வழிபாடாகும். குறிப்பாக நாகர்களுடைய ஆட்சிப் பரம்பலை உறுதிப்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளது.

நீர்வடி விளிம்பு

மேலும் இங்கு காணப்படும் அனைத்து குகைகளிலும் நீர் வடிந்தோடுவதற்காக கற்பீலி அமைக்கப்பட்டுள்ளன. குகைக்குள் நீர் வழியாமல் தடுக்கவும், மலையின் மேல் தேங்கி நிற்கின்ற மழை நீரை வெளியேற்றுவதற்கு மலையின் மேல் நீர்வடி விளிம்பு பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அறிவியல் ரீதியாக வளர்ச்சியடைந்த மக்கள் குடியிருப்பு இப்பிரதேசத்தில் இருந்துள்ளதனை இத்தொழில்நுட்பம் எடுத்துக் காட்டுகிறது.

கருங்கல்லிலான படிக்கட்டுக்கள்

மலையில் ஏறுவதற்காக கற்பாறையில் சுமார் 70 படிகள் செதுக்கப் பட்டுள்ளன. (நானிலம் 2011, பக்கம்-2) வலிமைமிக்க மிகவும் ஆழமாகவும், நுணுக்கமாகவும் குடைந்து படிக்கட்டுக்களை அமைத் துள்ளனர். எவ்வாறான ஆயுதங்களைக் கொண்டு இவற்றினைக் குடைந்திருப்பார்கள் என்பது இன்று வரைக்கும் புரியாத புதிராக வேயுள்ளது. இவ்வாறான வேலைகளை சாதாரண மனிதர்களால் மேற்கொள்ள முடியாது. எனவே இக்காலத்தில் உடல்வலிமை மிக்க மக்களும், அறிவியல் ரீதியாக வளர்ச்சியடைந்த மக்களும் வாழ்ந் துள்ளனர்.

வட்டமான குழிகள்

மலையில் வட்டமான குழிகள் மூன்றினையும் அடையாளங் காணமுடிகிறது. அது மக்களால் உரல் என நம்பப்பட்டு வருகிறது.

நீர்த் தடாகம்

முருகன் ஆலயத்திற்கு முன் நீர் நிரம்பிய நீர்ச்சுனை (கற்குழி) ஒன்றும் காணப்படுகிறது. இதில் எக்காலத்திலும் நீர் வற்றாத தன்மையினை அவதானிக்க முடிகிறது.

கருங்கற் தூண்கள்

நிலத்திலே நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் பல கற்தூண்கள் காணப்படுகின்றன. அரண்மனை அல்லது வேறு ஏதேனுமொரு கட்டிடம் இருந்தமைக்கான அடையாளமாக அவை விளங்குகின்றன. இக்கருங்கற் தூண்களை மிகவும் நேர்த்தியான முறையில் மலையிலிருந்து வெட்டி எடுத்துள்ளதனை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான கற்தூண்கள் குசலான்மலையின் இரண்டு இடங்களில் 200மீற்றர் தொலைவிற்கு அப்பால் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கருங்கற் குகைகள்

நீண்டநாள் இருப்பிடத்திற்குரிய இடமாகக் காணப்படுகிறது.

கட்டட இடிபாடுகள்

இக்கட்டட இடிபாடானது குசலான்மலையின் மேற்பரப்பில் காணப்படுகிறது. பெரிய மற்றும் சிறிய செங்கற்களைப் பயன்படுத்தி, இக்கட்டடம் அமையப் பெற்று இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இக்கட்டட இடிபாட்டினை வைத்து, நோக்குகின்ற போது, இம்மலையில் அரச மாளிகையொன்றும், இதனை அண்டி செறிவான மக்கள் குடியிருப்பும் அமைந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம்.

வட்ட வடிவிலான கல்

எழுத்துக்களோ, செங்கல் வேலைப்பாடுகளோ இல்லாத நிலையில் அரைவட்ட வடிவிலான கருங்கல்லொன்றும் காணப்படுகிறது. இதனை வாசற் படிக்கல்லாக பயன்படுத்தியிருப்பின், இவை கட்டடமொன்றினுடைய அழிபாடுகள் எனக் கருதலாம். இக்கல்லில் ஒருபகுதி சிதைவடைந்தும் காணப்படுகிறது.

அறுத்த கல்

இக்கல்லானது ஒரு மலையினை அறுத்தால், இரண்டு பகுதிகள் வருவது போன்று காட்சியளிக்கிறது.

தனிக்கல்

50 மீற்றர் தொலைவில் ஒரு கல் உள்ளது. இதனையொரு தனிக்கல் அல்லது கல்லால் செதுக்கப்பட்ட ஓர் உருவமெனக் கருதலாம்.

செங்கற்கள்



இங்கு அதிகளவு பண்டைய செங்கற்கள் பல்வேறு அளவுகளிலும், பல்வேறு வடிவமைப்புக்களிலும் காணப்படுகின்றன. பெரிய கட்டட அமைப்பொன்று இருந்தமையினை இச்செங்கற்கள் புலப்படுத்துகின்றன.

இங்கு அதிகளவு பண்டைய செங்கற்கள் பல்வேறு அளவுகளிலும், பல்வேறு வடிவமைப்புக்களிலும் காணப்படுகின்றன. பெரிய கட்டட அமைப்பொன்று இருந்தமையினை இச்செங்கற்கள் புலப்படுத்துகின்றன.

மட்பாண்டச் சிதைவுகள்

ஏராளமான செங்கற்கள், மட்பாண்ட ஓடுகள் காணப்படுகின்றன. அதேவேளை நீர் ஊற்றி வைக்கின்ற கூசா ஒன்றினுடைய தலைப் பகுதியொன்றும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு காணப்படும் மட்பாண்ட ஓடுகள் பெருங் கற்கால பண்பாட்டிற்குரியனவாக அறிஞர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது இங்கு செறிவான ஒரு மக்கள் குடியிருப்பு நிலவியமையை அறியலாம்.

தொகுத்து நோக்குமிடத்து, இப்பகுதியைப் பௌத்தர்கள் ஆக்கிரமித்து விடுவார்கள் என்ற அச்சம் இப்பகுதி மக்களிடம் காணப்படுகிறது. பேராசிரியர் பரணவிதான பௌத்த சமயத்தை வெளிக்காட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளார். தமிழ் பௌத்தத்தை வெளிக்காட்டும் கல்வெட்டுக்கள் வெளியிடப்பட்டாலும், அவை மறைக்கப்படுகின்றன. தமிழ்பௌத்தம் என்பதற்குரிய தொல்லியல் சான்றுகளை பெரும் பான்மை அரசு ஏற்றுக் கொள்ள மறுப்பதால், தமிழர்களின் பூர்வீக பூமிக்கு அச்சுறுத்தல் வரலாம் என்பது பிரதேச மக்களின் சிந்தனையில் ஊறியுள்ளது. ஏனெனில் அதிகம் பிக்குகளின் வருகை இப்பகுதிகளில் இடம்பெறுவதால், மக்கள் பீதியுடன் வாழ்கின்றனர். இதனால் பெரும்பான்மை சமூகத்துடன் பரஸ்பரத் தொடர்புகளை ஏற்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. ஆயினும், குசலான் மலையில் காணப்படும் தொல்லியல் எச்சங்கள் தமிழர் வரலாற்றுத் தொன்மையை வெளிக்காட்டுவதாக அமைகிறது.

-கவிதை-

அரங்கேற்றம்!

-ஏறாவூர் தாஹிர்-

பசுமை நினைவுப் பழகளில்
பாதம் பதித்து நடக்கையில்
பாழும் வரட்சி நிகழ்வுகள் வந்து மோதி,
பாதை மறிப்புக்களாகி..
திரண்ட வதனப் பரப்பில் உருண்ட
உருண்டை விழிக் கவர்ச்சியில்
வசமிழந்த போதுதான்..
வாழ்வியலின் வசந்தம் தொடங்கியது!
சூல் கொண்ட காற்று
சூறாவளியாகவும்,
தென்றலாகவும் மாறி, மாறி
வீசிய போதுதான்..
வாழ்க்கையின் அர்த்தம் புரிந்தது!
புயலின் பின் அமைதியும்,
அமைதியின் பின் புயலுமாக..!
சமவெளிப் பாதையில்
சஞ்சரித்த வேளையில் தான்..
ஏகாந்தத்தின்
எதேச்சதிகாரம் ஆரம்பித்தது!
எதிர்பாராத விதமாய்..!
சேவலும், பேடுமாய்
செய்திப் பரிமாற்றம் நடக்கையில்..
குயிலும், மயிலுமாய்
கவி ஆழக் களிக்கையில்..
படகும், துடுப்புமாய்
பயணம் தொடர்கையில்..
ஜோடிப் புறாக்களாய்
கூடிக் களிக்கையில்..
அரக்கத்தின்
அரங்கேற்றம் நிகழ்ந்தது..!

–சிறுகதை–

அன்புத் தங்கைக்கு...!!!

–வவுனியூர் இரா.உதயனன்–

அருந்தவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார காலமாகி றது. திடீரென ஏற்பட்ட மாரடைப்பு அவரது வாழ்க்கைப் போராட் டத்தை மேலும் மாற்றியிருந்தது. அகதியாய்ப் புலம் பெயர்ந்து லண்டனுக்கு வந்த அவருக்கு, இது நாள் வரை தொலைத்தவற்றை நினைத்து, நினைத்து வருந்தாமல் இருந்திருந்தால், இப்படியொரு நிலைமை வந்திருக்கச் சாத்தியமேயில்லை.

அருந்தவனின் தங்கை வினோதினி தானும் குடும்பத்தாருடன் லண்டன் வரக் கேட்ட போது, அவர் எழுதிய கடிதம் தலையணைக்கு அடியில் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது.

அருந்தவன் அதை எடுத்துப் பிரித்து, மீண்டும் வாசித்துப் பார்த்தார். அன்பான வினோதினிக்கு,

நீ இங்கு வர விரும்புவதைத் தடுக்கவோ அல்லது போலிக் காரணம் காட்டியோ இந்தக் கடிதத்தை எழுதவில்லை. உன் அருமை அண்ணன் என்ற பாசத்துடன், நடைமுறை வாழ்க்கையை இந்தப் புலம் பெயர்ந்த மண்ணின் நிஜ வாழ்க்கையை உனக்கு எழுது கிறேன். உன் நிலையிலிருந்து பாரக்கும் போது இக்கரை உன் கரையை விட பச்சையாகத் தெரியும். ஆனால் அது நிஜமில்லை.

இங்கு வந்து நான் வாழ்க்கையைத் தொலைத்து விட்டேனோ என எண்ணத் தோன்றுகிறது. ஆசைகள் அதிகமாகும் போது தான் ஆபத்துக்களும் அதிகமாகின்றன.

எமது அப்பா, அம்மாவின் அரவணைப்பில் அன்பு சொரிய வாழ்ந்த அந்த நாட்களை நான் நினைத்துப் பார்த்தேன். அன்பு என்பதன் அர்த்தத்தை இங்கு புரிந்து கொள்வது இளந்தலைமுறையினருக்கு கடினமாக இருக்கிறது.

பாசமாக வளர்த்த எங்கள் தாய், தந்தையருக்கு நாங்கள் அன்புப் பிள்ளைகளாக இருந்தோம். ஆனால் இங்கே பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையே நிறைய இடைவெளி இருந்து வருகிறது. எங்களை வளர்த்த பெற்றோர் போல் நாங்களும் இல்லை. எங்கள் பெற்றோருக்கு இருந்த பிள்ளைகள் போல் எங்கள் பிள்ளைகளும் இல்லை.

எங்கள் பிள்ளைகள் மாறுபட்ட சமூதாயப் பழக்க வழக்கங்களுக்கு ஊறி வேறுபட்டுக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

அந்த நாட்களில் நானும், நீயும் சிறு பிள்ளைகளாக இருந்த காலத்திலும் சரி, வளர்ந்து வேலைக்குப் போன காலத்திலும் சரி ஒரு நாளாவது எமது பெற்றோரை எதிர்த்துப் பேசியிருப்போமா?- எனக்கு இதுவரை அப்படிப் பேசியதாக ஞாபகமில்லை.

இங்கு எனது மகனோ, மகளோ பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்தால், நான் அறைக்குள் முடங்கி விடுவேன், என் மரியாதையை நானே காப்பாற்றிக் கொள்ள. ஆனால் இங்கு பலருக்கு பிள்ளைகளின் வாயால் பேச்சு வாங்குவது பழக்கப்பட்டு விட்டது.

"யூ ஸ்டுபிட்"- என்று எனது மகள் எனது மனைவியைப் பேசும் போது, அவள் கன்னத்தில் ஓங்கி அறைய வேண்டும் போலத் தோன்றும். ஆனால் அப்படிச் செய்தால், ஓங்கி அறைந்தால், நான் கம்பி எண்ண வேண்டியதுதான்.

பல்கலைக்கழகம் சென்று வரும் எனது மகன் காதில் தோடும் மாட்டி, காலடியில் கிழிந்த ஜீன்சும் போட்டு, கெந்திக் கெந்தி நடக்கும் போது, அந்தக் காலத்து ஜமேக்கன் நாட்டுக் காப்பிலிகள் நடந்த ஞாபகம் தான் எனக்கு வரும்.

"ஏன்டா தம்பி இப்படி நடையும் மாறி, நடத்தையும் மாறித் திரிகி றாய்?"– என்று கேட்டால், "டடி யூ ஆர் அவுட் ஒப் ஓடர்"– என்று சொல்லும் போது, அப்படியே அவன் கழுத்தை நெரித்து, விடலாமா எனத் தோன்றும்.

எமது மகள் சௌந்தர்யா போடும் ஆடைகளைப் பார்த்தால், என் மகளா?- இப்படி என்ற எண்ணம் உனக்குக் கூடத் தோன்றும். அது மாத்திரமல்லாமல், உனக்கு வியப்பாகக் கூட இருக்கும்.

"பசன்"– என்று சொல்லி நாளுக்கு நாள் மாறுகின்ற ஆடையுகத்தில் மயங்கிக் கிடப்பவள் சௌந்தர்யா. அவளுக்கு சௌந்தர்யா என்று பெயர் வைத்ததை விட, ஆங்கிலத்தில் ஏதாவது பெயர் வைத்திருக் கலாமென எனக்கு அடிக்கடி தோன்றும்.

இரண்டு துண்டுகளாகக் கழுத்தின் பின்புறமாக இறுகக் கட்டி, ஆழமாக வெட்டி அமைக்கப்பட்ட "ப்ளவுஸ்"– சை அவள் போடும் போது, சீ..! எனக்கு என் மகளைப் பற்றி விமர்சிக்கவே வெட்கமாக இருக்கிறது. இரண்டு மார்பகங்களின் அரைவாசி "ப்ளவுஸ்"– சினூடாக வெளியே நீட்ட, கட்டையாக இடுப்பின் கீழ் அரையடி உயரத்திற்கு "ஸ்கேர்ட்"– போட்டுக் கொண்டு அவள் நடக்கும் போது கண்களை மூடிக் கொண்டு கடவுளே என்று நான் வெட்கத்தால் தலை குனிந்த நாட்கள் தான் எத்தனை?

தாயின் வயிற்றிலே பிள்ளை இருக்கும் போது, பிள்ளைக்கு உணவூட்டிய அந்தத் தொப்புக் கொடி அறுந்த இடத்திலே வெள்ளிச் சலங்கைகள் தாளம் போட, அவள் நடந்து போகும் காட்சியை இனிமேலும் என்னால் விவரிக்க, விமர்சிக்க இயலாது.

என் மனைவி அனிதாவிடம் சொன்னால், "பிள்ளைகளின் பக்கம் நின்று, அவர்கள் செய்வது சரி"– என்று அடம்பிடிப்பது அவளது பழக்கமாயிற்று.

அனிதாவும் என்னைவிட நல்ல பொறுப்பான வேலையில் இருக் கிறாள்.

கவிதை

மலையகம்

– ச.கலை, இராகலை –

பச்சைப் பசேலாக
பசுமை நிறைந்து
காட்சி தரும்
மலையகம்!

பசுமைக்குள்
ஒளிந்திருக்கும்
ரணங்களும்
வேதனைகளும்!

வேலி தாண்டி
வெளியேறாமல் தடுக்கும்
மலை முகடுகளும்
அதிகாரவர்க்கமும்!

மலை முகட்டில் உதித்து!
மறை முகட்டில் மறைவான்!
ஆதவன் இருப்பினும்
விடியாமலே இருக்கும்
எம் வாழ்வு
விடியலைத் தேடி..!!!

-கவிதை-

வாழ்க்கைப் பயணம்!

-திருமதி லோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி, அக்கரைப்பற்று-

வீரத் தமிழனாய் வியக்க வைத்த சந்ததியின்று
கோழைத் தனமாய்த் தொங்கலாமா தூக்கில்?
சரித்திரம் படைத்திட்ட தமிழன் வரலாற்றைப்
புரட்டிப்பார் இளைய சமூதாயமே!
முத்தெடுத்தவன் தமிழன் அன்று
கப்பலோட்டியவனும் தமிழன்–இன்று
செத்துப் போகிறாயே கடலில் வீழ்ந்து
ஓட்ட முடியவில்லையா வாழ்க்கையை!

கடனை வாங்கி உடைமையை இழக்காதே
கவலை வந்தால் கடலில் குதிக்காதே
சவாலை வெல்லும் தைரியம் கொண்டு
கவலையை வென்று காரியம் நகர்த்து!
இரவும் பகலும் வருவது போல்
இன்பமும் துன்பமும் வரும் போகும்
விழுவது எழுவதற்குத் தான் என்று கொள்
எழுந்து விடுவாய் சீக்கிரமே!

பஞ்சம் கண்டு மனம் சோம்பாதே
வஞ்சங் கொண்டுழைத்துப்பார்–நீ
வாழ்வில் வளம் காண்பாய்
நஞ்சருந்தி மட்டும் போக்காதே இன்னுயிரை!
உன்னை நீயே நேசிக்கப் பழகு
உன்னுயிரை நீயே கொல்ல மாட்டாய்
அல்லல் கண்டு அலறாதே அதனை
வெல்லும் மனம் கொள்ளு வீணாகாதே!

முகப்பில்...

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா 03.02.2020 அன்று காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, மண்முனைப்பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலாளர் மு.உதயஸ்ரீதர் ஆகியோர் சமாதான நீதவானும், "தென்றல்"–சஞ்சிகையின் எழுத்தாளருமான வே.மகாலிங்கத்துக்கு கடமைப்பை, மற்றும் கடமை அடையாள அட்டை ஆகிய வற்றை வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம்.

நகைச்சுவைத் "தென்றல்"

"சோதனை மேல்
சோதனை
போதுமடா
சாமி.....
கொரோனா
தான்
வாழ்க்கை
என்றால்
தாங்காது
பூமி.."

நாட்டார் பாடல்களில் தத்துவப் பாடல்கள்!

–வயலற் சறோஜா சந்திரசேகரம்–

நாட்டார் பாடல்கள் என்று கூறும் போது, ஏட்டுக்கல்வி அறிவு பெரும்பாலும் இல்லாத நாட்டுப் புறமக்களால் பாடப்பட்ட, பாடல்கள் தான் நாட்டார் பாடல்கள் எனப்படுகின்றன. இவை குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சி பாடலிற் தொடங்கி, இறப்பின் பின் பாடப்படும் ஒப்பாரி வரை நாற்பது வகைப் பாடல்களை இனங்காணலாம். கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளங்களின் உணர்ச்சி வெளிப்பாடுகள் தான் இப்பாடல்கள். நதிமூலங்களையும், ரிஷிமூலங்களையும் காண முடியாதிருப்பது போல இந்நாட்டார் பாடல்களின் மூலங்களையும் காணமுடியாது. வாய்மொழி வாயிலாக வளர்ந்து எழுத்துருப் பெற்றவைதான் இவை. முறைசாராக் கல்வியின் முதற்படி இவை யெனலாம். 1846 இல் வில்லியம் ஜேம்ஸ் தோமஸ் முதன் முதலில் ஆங்கிலத்தில் "போக்லோர்"–(Fock Lore) எனக் குறிப்பிட்டார். அதாவது "நாட்டுப்புறவியல்"– இதில் ஒரு அம்சமே. "போக் சோங்ஸ்"– (Fock songs) நாட்டார் பாடல்களை பல்வேறு அறிஞர்களும், மேதைகளும் ஆய்வு செய்து, நூல் உருக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக் கதே. இவற்றுள் தத்துவப் பாடல்களை நோக்குவோம்.

வாழ்க்கையில் எல்லாமே நிலையற்றது என்பதைச் சிந்திக்க வைத்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது தத்துவமாகும். நாட்டுப்புற மக்கள் கூட, வாய்மொழிப் பாடல்கள் மூலம் தத்துவப் பாடல்களைத் தலை முறைக்குத் தலைமுறை கைமாற்றியும் உள்ளார்கள். ஆழமான தத்துவங்களை நாசூக்காக நயம்படப்பாடியும் உள்ளார்கள். ஆய்வாளர்கள் இப்பாடல்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர்.

1.உண்மைத் தத்துவம்
2. இறை தத்துவம்
3. விதித் தத்துவம்

உண்மைத் தத்துவத்தை உணர்த்தும் ஒரு பாடலை நோக்குவோம்.

"ஆம ஆயிரம் முட்டயிட்டு
ஆனபலன் ஒன்றுமில்ல – எங்கிட
கொம்பன் னொரு குட்டி போட்டா– அது
கோடி பெறும் ஊரவர்க்கு"

சமூகத்திற்கு எந்தவிதத்திலும் பிரயோசனம் இல்லாதவர்கள் எத்தனை பேர் பிறந்தாலும், ஒன்று தான் இறந்தாலும் ஒன்றுதான். இவர்களால் சமூகத்திற்கோ– மக்களுக்கோ பயனேதும் கிடையாது. ஆனால் நற் பண்பும், நல்லறிவும், பிறசினேகமும் உள்ள ஒருவன் பிறந்தால், அவனால் ஆயிரக்கணக்கானோர் பயனடைவார்கள். ஆமை ஆயிரம் முட்டையிட்டும் பயன் பெரிதாக இல்லை. ஆனால் கொம்பன் அதாவது யானை ஒரு குட்டி போட்டால், அது கோடி பெறும். பய னற்ற பிறவிகளை ஆமைக்கும், பயனுடையோரை யானைக்கும் ஒப்பிட்டு, உவமித்து அழகாகப் பாடியுள்ளார்கள். **"ஆனை கறுத்தாலும், ஆயிரம் பொன்"**– என்ற பழமொழி கூட, ஆமையின் பெறுமதியைக் கூறுவதாகவே அமைந்துள்ளது. இனி, இன்னோர் தத்துவப் பாடலை நோக்குவோம்.

"ஆனையோடு ஆன
அசைந்தணையும் அல்லாமல்
பூனையோடு ஆன– என்றும்
புணர்ந்தினையப் போறதில்ல"

உலகில் ஆற்றலும், அறிவும், நற்பண்பும் உள்ள உயர்குல மக்கள் தங்களைப் போன்ற மக்களோடுதான் பழகுவார்கள் – உறவாடி மகிழ்வார்கள். பண்பாடற்ற பரதேசிகளோடு இவர்கள் உறவு வைக்க விரும்பமாட்டார்கள். தண்ணீரோடுதான் தண்ணீர் சேரும். எண்ணையோடு தண்ணீர் ஒரு போதும் சேராது. பலம் கூடிய மக்கள் வசதி, அந்தஸ்து, படிப்பு, பணம் கூடியோர் தம்மை விடக் குறைந்தவர்களோடு ஒட்டி உறவாடமாட்டார்கள். கிராமங்களிற்கூட நல்லொழுக்கம், கௌரவம், அந்தஸ்து, உயர்குலம், கோத்திரம் பேணப்பட்டு வருவதை இப்பாடல் சித்தரிக்கிறது. உவமைகளும், உதாரணங்களும் மிகச் சிறப்பாகவே கையாளப்பட்டுள்ளது. யானைக் கும் – பூனைக்கும் இடையிலான உறவு மலைக்கும் – மடுவிற்கும் இடையிலான உறவாகவே உணரப்படுகிறது. கிழக்கிலங்கை வாழ் மக்களின் கவித்துவத்திற்கு இப்பாடல் சிறந்த சான்றாகும். கிராமியப்

பாடல்களில் அனேகமாக மண்வாசனைச் சொற்களே பிரயோகிக்கப் படுகிறது. இங்கு "ஆன"– என்பது யானையையே குறித்து நிற்கிறது. அடுத்து விதித் தத்துவத்தை நோக்குவோம். "ஆதி எழுதினத அழித்தெழுத முடியாது"– என்பது பழமொழி.

"ஆரும் எழுதினத
அழிச் செழுதிப் போட்டிரலாம்
அந்த ஆதி எழுதினத– அவன்
அழிச் செழுதப் போறதில்ல"

இறைவனால் எழுதப்பட்ட விதியை மாற்ற முடியாது. எது?, எப்போது?, எங்கு?, எப்படி?, ஏன்?, எவ்வாறு நடக்க வேணுமோ அது.. அங்கே.. அப்படியே.. நிகழும் என்ற ஆழமான தத்துவத்தை ஏடறியா.. எழுத்தறியாப் பாமர மக்கள் பாடி வைத்துள்ளமை பெருவியப்பிற்கு ரியதே. எல்லாம் அவன் செயல் என்ற தத்துவம் கிராம மக்களிடையே வேரூன்றியிருப்பதை இப்பாடல் துல்லியமாகப் பறைசாற்றுகிறது. இதே தத்துவத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்தும் வகையிலமைந்த பாடல் ஒன்று.

"மண்டையில் எழுதி
மயித்தால மூடினத
ஆறிவார் இவ்வுலகில்– அந்த
ஆதிவல்லேன் தானறிவான்"

இறைவன் மனிதனுக்கு நடக்க வேண்டிய அனைத்தையும் ஏற்கனவே எழுதி முடித்து விட்டான். அதை முன்கூட்டியே எவராலும் அறிய முடியாது. வாழ்க்கையில் நிகழும் போதுதான் காண முடியும். ஒருவனுக்கு மரணம் வரும் வேளையில் துறைபோன வைத்தியரின் சிகிச்சை கூடப் பலன ளிக்காது போகலாம். அதுதான் இறைவன் முன்கூட்டியே ஒவ்வொருவரது தலையிலும் எழுதியதை மாற்றும் வல்லமை யாருக்குமில்லை. ஒரு பெண்ணுக்கு இன்னார்தான் கணவன் என்று இறைவன் ஏற்கனவே நிட்சயித்திருந்தால், அவன் எங்கிருந்தாலும் தேடி வந்து அப் பெண்ணை மணப்பான்– என்பதைக் கீழ்வரும் பாடல் பறைசாற்றுகிறது.

"சந்தித்தாறாகும்
தலையெழுத்தும் உண்டு மெண்டா
தெண்டிக்கத் தேவையில்லை– தாலி
தேடிவரும் காலடிக்கு.."

இவ்வாறாக ஆழமான– பொருட்செறிவு நிறைந்த பாடல்களை நாட் டார் பாடல்கள் தந்துள்ளன எனக் கூறினால் அது மிகையாகாது.

நெஞ்சம் அழுகிறது..!!!

–கவிஞர் செ.குணரத்தினம், அமிர்தகழி–

என் வயதை ஒத்தவரும்
எனக்கிளைய வயதினரும்
முன்பின்னால் காலமாகி
மேலுலகம் போகையிலே
என்மனது ஏக்கமுறும்
என் முழவு எப்போ வென்று?
உண்மையிலே சாவதற்கு
உள்ளூரப் பயமெனக்கு..!

பிறப்பொருநாள் இறப்பொருநாள்
பெரியவர்க்கும், சிறியவர்க்கும்
வருமிதனை மாற்றுவதற்கு
வல்லவர்கள் யாருமில்லை!
இறந்துவிட்டால் நான் தவழ்ந்த
எனதினிய ஊர் மண்ணை
மறந்துவிடப் போகிறேனே
மனமிதனால் தவிக்கிறது?

மனைவி மக்கள் சுற்றத்தாரை
மறந்து நான் பிரிந்திருவேன்
என் மனதில் ஏக்கமில்லை..!
என்னையொரு கவிஞனாக்கி
புனைகதைகள் எழுதத் தூண்டி
பொழுதெல்லாம் கடல் குளிக்கும்
எனதருமைத் தொழிலாளர்
இவர்களை நான் பிரிதல் சோகம்..!

ஊர்விசரன் பூபாலி
உயர்ந்து நிற்கும் புளியமரம்
கோரியடி கண்டல்காடு
கூத்தாடும் கடலலைகள்
மாரிமழை நீரையள்ளும்
முகத்துவாரம் இவற்றையெல்லாம்
நான் பிரிந்து போவேனென்றே
நெஞ்சமெலாம் அழுகிறது..!

–கட்டுரை–

உலகை உலுக்கும் கொரோனா!

–தாரணி–

முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் பற்றி நாம் அறிந்ததே. ஆனால் இப்போது நடப்பது கண்களுக்குத் தெரியாத மூன்றாம் உலகப்போர். முதலாம், இரண்டாம் உலகப் போர்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவை.

அதாவது இரு நாட்டிற்குமிடையே இராணுவப் படைகளைக் கொண்டு நடாத்தப்படும். இதில் இரு நாட்டினரும் எடுக்கும் முடிவே முடிபாகும். இது பொருளாதார இழப்பு, உயிரிழப்பை ஏற்படுத்தவல்லது. ஆனால் கண்களுக்குத் தெரியாத வைரஸ் (Covid- 19) உலகமே இணைந்தால் கூட, நிறுத்த (தற்போது) முடியவில்லை.

இந்தவகை வைரஸானது முதலில் விலங்கினத்துக்கு சிறிய வகையில் பாதிப்பை ஏற்படுத்தியது. அந்தக் காலங்களில் பழைய வகை வைரஸ் குடும்பத்தைச் சார்ந்தது. மனிதனைத் தாக்கும் அளவுக்கு உருவெடுத்தது போர் நடத்த ஆரம்பித்து, தான் செயற்பாடுகளை மிக மிகக் கொடிய வகையில் விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்த வைரஸ் "Covid- 19" எனப் பெயர் பெறுவதற்குக் காரணமாகும்.

அண்டைய நாடான சீனாவிலுள்ள ஊகான் மாகாணத்தில் மருத்துவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இது அந்த மருத்துவரையும் விட்டு வைக்கவில்லை. இந்தத் தொற்று வைரஸ் வகையைச் சார்ந்தது. ஆட்களை ஆட்கொள்ளும் வைரஸ். ஊகான் மாகாணத்திலுள்ள ஏறத்தாழ அனைவரையும் விட்டு விடாமல் தொற்றிக் கொண்டது.



கொரோனா வந்த நோயாளிகள் எந்தப் பொருளைத் தொட்டாலும், தும்மினாலும் மற்றவர்களைத் தொற்றிக் கொள்ளும். இத்தகைய வைரஸ் தொற்றானது சீனாவில் மட்டுமல்லாது, அனைத்து உலக நாடுகளிலும் விசா இல்லாமல் விளாசித் தள்ளிக் கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க முடியாமல், வளர்ந்த நாடுகளும், வளர்ந்து வரும் நாடுகளும் தன் மக்களைக் காப்பாற்றத் தடுமாறித் தடுமாறி நாட்களைக் கடந்து சென்று கொண்டே உள்ளது. இந்த வைரஸ் இருமல், காய்ச்சல், உடல் சோர்வு, வாந்தி, தலைவலி தொடர்ந்து இருக்கும் பட்சத்தில் அவர்களுடைய இரத்த மாதிரிகளைக் கொண்டு அடையாளம் காண பதினான்கு தினமாகும்.

இதனால் மனித உடம்பிலுள்ள நுரையீரல், மூச்சுக்குளாய் ஆகியன பாதிப்படையும் அளவுக்கு மிகக் கொடிய நோய் கொரோனா எனக் கூறினால் அது மிகையாகாது. நோயைத் தடுக்கும் வண்ணமாக உலக நாடுகள் பல கட்டுப்பாடுகளை விதித்தும், நாடு முழுக்க ஊரடங்கைப் பிறப்பித்தும் தம் நாட்டுப் பிரஜைகளைப் பாதுகாக்க செயற்பட்டு வருவது கண்கூடு.

தடையின் சில நன்மைகள்

01. அனைவருக்கும் விடுமுறை.
02. மதுபானக் கடைகள் மூடப்பட்டது.
03. பேருந்து நிலையத்திலும், மற்றப் பொதுக் கழிப்பறைகளும் தினமும் சுத்தம் செய்யப்படுகின்றன.
04. தொலைக்காட்சி சீரியல்கள் இல்லாமலும் இல்லற அரசிகளால் வாழ முடிந்தது.
05. நெடுஞ்சாலைகளும், வீதிகளும், சாலைகளும் அந்தந்த உள்ளூராட்சி சபைகள் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.
06. அரச மருத்துவமனைகள் யாவும் சிறப்புடனும், பொறுப்புடனும் செயல்பட்டது.

உலக நாடுகளில் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணி செய்பவர்கள், காவல் துறையினர், ஊடக வியலாளர்கள் அனைவரும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து நம் உயிரைக் காப்பாற்றவும், கொரோனாவைத் தடுக்கவும் அரும்பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

கொரோனா வைரஸை இந்த உலகிலிருந்து விரட்டியடிக்க உடலால் பிரிந்து, மனதால் இணைந்து, வீட்டிலே இருந்து புதுவாழ்வு படைப்போம்.

"கொரோனா"– வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளையும் கதிகலங்கச் செய்து கொண்டிருக்கிறது. எனவே இதன் கோரப் பிடியிலிருந்து விடுபடுவதற்கு இலங்கை சுகாதார அமைச்சும், பாதுகாப்புத் தரப்பினரும் வெளியிடும் தகவல்களுக்கேற்ப செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(ஆசிரியர்)





–சிறுகதை–

வக்கிரப் பார்வைகள்!

–திருமலை செல்வபாலா–

நகரம் என்றும் சொல்ல முடியாத, கிராமம் என்றும் ஒதுக்கிவிட முடியாத அந்த ஊருக்கு ஓர் அலுவலராக வந்த நான், சந்திக்க வேண்டியவரைச் சந்தித்து, அலுவலை முடித்துக் கொண்டு, திரும்பும் நோக்கத்துடன் அந்தச் சந்திக்கு வருகிறேன். ஏதோ ஒரு நிறுவனத்தின் அன்பளிப்பாய் உருவான சிறிய பஸ் தரிப்பிடம். நாடிச் சென்று நின்று கொண்டேன். தரிப்பிடத்தின் மறுகோடியில் ஓர் இளம் பெண் கைக்கடிகாரத்தைப் பார்ப்பதும், தெருவைப் பார்ப்பதும் சலிப்புடன் தவிப்பதுமாய்..

இவளும் பஸ்ஸுக்காகத்தான் காத்திருக்கிறாள் போல.. மனதுள் நினைத்துக் கொள்கிறேன். நேரம்தான் கரைகிறதே தவிர, பஸ் வந்தபாடில்லை. இப் போதைக்கு வருமா? என்பதும் தெரிய வில்லை. அந்தப் பெண்ணைக் கேட்கலாமா? வேண்டாம். அவளே ஏதோ "டென்ஸனில்"– தவித்துக் கொண்டிருக்கிறாள். நான் கேட்டால் ஒழுங்கான பதில் வருமா? என்பது சந்தேகம்.

அருகில் அமர்ந்திருந்த இளவட்டங்களின் பேச்சு.. என் காதில் விழுந்தது. அதுவும் அந்தப் பஸ்தரிப்பிடத்தில் தவித்துக் கொண்டிருக்கும் பெண்ணைப் பற்றியிருக்க, என்னையறியாமல் காதுகளை அந்தப் பக்கம் நீட்டிக் கொண்டிருக்கிறேன்.

எதிரே தெருவின் மறுபக்கத்தில் ஒரு சிறிய தேநீர்க்கடை. ஒரு தேநீராவது குடித்து விட்டு, வருவோம். பஸ் வந்தால் ஓடி வந்து ஏறிக் கொள்ளலாம்.

ஏற்கனவே நாலைந்து பேர் அமர்ந்திருந்தார்கள். நீளமான வாங்கு ஒன்றில் இரு இளைஞர்கள் அமர்ந்திருக்க, பக்கத்தில் அமர்ந்திருந்தபடி உள்ளே தேநீர் போட்டுக் கொண்டிருந்தவரிடம் சைகையால் "ஒரு தேநீர்"– என்று ஓடர் பண்ணிவிட்டு, வாங்கில் அமர்ந்து கொள்கிறேன். கூச் சல் குழப்பமில்லாத அந்தச் சூழ்நிலை மனசுக்கு கொஞ்சம் இதமாயிருந்தது.

"அங்கை பார் மச்சான்.. கனநேரமாய் ஒரு பிகர் நிற்குது"
"பஸ்ஸுக்கு நிற்கிறாளாக்கும்"
"இல்ல மச்சான், அவ வந்த பிறகு இரண்டு பஸ் போயிட்டுது. அவ ஏறலை.."
"ஒரு வேளை யாராவது வர வேணுமோ..? அதுக்குக்கூடக் காத்திருக்கலாம் தானே..!"
"அப்படித்தானிருக்க வேணும்.. ஒரு வேளை லவ்வருக்காகக் காத்திருக்காளோ..?"
"இருக்கும் மச்சான். இப்ப உதுதானே நடக்குது. வீட்டுக்குத் தெரியாம "கிளாசுக்குப் போறன்.. டியூசனுக்குப் போறன் என்று வாய் சொல்லிப் போட்டு வெளியில சந்திக்கிறது.."
அந்த இளைஞர்களின் உரையாடல் சுவாரஸ்யமாய் இருந்தது. சிரிப்பும் வந்தது. பெண் பிள்ளை ஒருத்தி தனியே நின்றுவிட்டால் போதும். எத்தனை ஆராய்ச்சி, எத்தனை கற்பனைகள்..
அந்தப் பிள்ளையின் நோக்கம் நல்லதாயிருந்தாக்கூட இவர்கள் பார்வையில் எத்தனை வக்கிரம்? இதேபோல் நானோ அல்லது ஓர் ஆணோ அந்த இடத்தில் அதிக நேரம் நின்று கொண்டிருந்தால், பரிதாபப்பட்டாவது திரும்பிப் பார்த்திருப்பார்களா..?
நேரம் தான் செல்கிறது.
"என்ன மச்சான்.. இவ்வளவு நேரமாச்சு.. அவளின்ர லவ்வர் கூட வரயில்ல.."

"ஒருவேளை.. நடந்து வாறானோ என்னவோ?"- நக்கலடித்தான் ஒருவன்.

"இல்ல மச்சான்.. இந்தக்காலப் பொம்பளயளுக்கு நடந்து வாறவனைப் பிடிக்காது. மோட்டார் சைக்கிளில வரவேணும். இல்லாட்டி காரிலயாவது வரவேணும்"- என்று சொல்லி விட்டு. இரு வரும் சேர்ந்து சிரிக்கி-றார்கள்.

எனக்கும் சிரிப்பு வந்தது.

ஏதோ சில பெண்களின் நடவடிக்கைகள் ஒட்டு மொத்த பெண்ணி னத்துக்கே களங்கமாய் அமைந்து விடுகிறது.

என்ன பஸ் சேவை நடத்துகிறார்களோ? இன்னும் பஸ் வந்தபா டில்லை. எரிச்சலாய் இருந்தது.

முதலாமவன் கொஞ்சம் குனிந்து மற்றவனிடம் மெல்லிய குரலில் சொன்னான்.

"எனக்கென்னவோ சந்தேகமாய்க் கிடக்கு மச்சான்?"

"என்ன? என்ன? திடீரென்று.."

"இல்ல மச்சான். ஒருவேளை இவ அந்த மாதிரிக் கேஸா இருப்பாளா?"

"அந்த மாதிரி எண்டா"

கண் சிமிட்டிச் சிரிக்கிறான்.

"ஓகோ.. ஏன் மச்சான்.. கிட்டப் போய் றை பண்ணிப் பாத்தா என்ன..?"

எழுந்து ஓங்கியறைய வேண்டும் போலிருந்தது எனக்கு. சீ.. என்ன மனுசன்கள்..? தனியே ஏதோ ஒரு தேவைக்காகக் காத்து நிற்கும் பெண்ணைப் பற்றி இப்படிக் கேவலமாய்..?

புது இடம்- புது மனிதர்கள்.

என்னை அடக்கிக் கொள்கிறேன்.

ஒருவேளை இவர்கள் நினைப்பது போலவே அந்தப் பெண் இருந்து விட்டால்..!

எந்தப் பற்றில் எந்தப் பாம்போ..

வேண்டாம் பொல்லாப்பு. தட்டிக் கேட்கப் போய் இவர்களிடம் அடி வாங்க முடியாது.

"ஆசையப் பார் தேத்தண்ணி குடிக்கக்கூடக் காசில்லாம குந்திக் கொண்டிருக்கிறம். இதுல பொம்புள கேட்குதா? ஆவள் ஐந்நூறு..

ஆயிரம்.. எண்டு கேட்பாள். உன்னால் குடுக்க முடியுமா?"

"இல்ல மச்சான்..சும்மா.."

சுமாளிக்கிறான்..!

கொஞ்ச நேரம் சென்றிருக்கும். எஸ்கூட்டி ஒன்றில் ஒரு பெண் வந்து, பஸ் தரிப்பிடத்தின் முன்னே நிற்க, காத்திருந்தவளும் ஏதோ திட்டியபடி, ஓடி வருகிறாள்.

இளைஞர்களைத் திரும்பிப் பார்க்கிறேன். இருவர் முகத்திலும் ஈயாடவில்லை. சப்பென்றிருந்தது.காதலன் வருவான் என்று எதிர்பார்த்தார்கள். வரவில்லை. காமுகன் வருவான் என்று கற்பனை செய்தார்கள். அதுவும் நடக்கவில்லை. கடைசியில் ஒரு பெண். அவளுடைய தோழியாக இருக்க வேண்டும். வந்து நிற்கிறாள்.

இருவரது அசைவுகளையும் வைத்து என்ன பேசியிருப்பார்கள்? என்று கற்பனை செய்து பார்க்கிறேன்.

"என்னடி இவ்வளவு லேட்.. எவ்வளவு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமோ?"

"சொறிடி.. சொறி.. வெளிக்கிடக்குள்ள தான் பார்த்தன்.. ஸ்கூட்டி காத்துப் போய்க் கிடக்கு.. ஸ்கூட்டியக் கொண்டு வந்து பச் போட்டு வர லேட்டாச்சுதடி.. சொறிடி.."

"நீயும் உன்ர சொறியும்.. நான் இங்கை தனிய நிற்க, அங்கை பார் அந்தக் கடை வாசலில இருந்து கொண்டு, சனியன்கள் என்னையே முறைத்துப் பார்த்துக் கொண்டு.."

"சும்மா விடுடி.. வீட்டில தாய், தகப்பனைப் பேய்க் காட்டித் தண்டச் சோறு திண்டிட்டு ஊர் மேய வெளிக்கிட்டு வருவார்கள். அவங்களைப் போய்த் தூக்கிப் பிடிச்சுக் கொண்டு.. வாடி வந்து ஏறடி.."

தேநீர்க் கடையைப் பார்த்தபடி, ஒரே உதையில் எஸ்கூட்டியை உதைக்கிறாள்.

அதுவும் ஸ்டாட் ஆகிவிடுகிறது.

அவள் உதைத்த உதை.. என் நெஞ்சில் உதைத்தது போல, துடிது டித்துப் போனேன் நான்.

ஏனென்றால், இந்தக் கேடுகெட்டவன்களோடு சேர்ந்து நானும் அல்லவா பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர்களின் எண்ணங்களைச் சுமந்திருந்தேன்.

–கட்டுரை–

பின்னைய மானிட இலக்கியம்!

–திருமலை செல்வபாலா–

நவீன நுகர்ச்சிச் சமூகம் தழுவிய கலைப் படைப்புக்கள் ஆக்க உற்பத்தி என்ற வடிவத்தை முனைப்புடன் எடுக்கும் பொழுது பல்வேறு சிக்கலான நிலைகள் தோற்றம் பெறுகின்றன. கல்வி காரணமாகவும், வாழ்க்கை நிலை காரணமாகவும் மத்தியதர வகுப்பினரின் ஈடுபாடு அல்லது கையாடல் அச்சு வடிவத் தொடர் பாடலிலும், மின்னணுத் தொடர்பாடலிலும் மேலோங்கியுள்ள மையால், அவர்களின் புலக்காட்சிகளின் திணிப்பு சமூகத்தின் அடித்தளத்து மக்கள் மீது மேற் கொள்ளப்படுகிறது.

மத்தியதர வகுப்பினரது "ஊசலாடும்"– மனவெளிர்ச்சிகளின் ஆக்கிர மிப்பு வடிவங்களாகப் புனைவுகள் எழுச்சி கொள்கின்றன. பிரதிகூலம் எய்திய சமூக அடையாளத்தைக் காட்டிலும், தமது அடையாளத்தைக் காட்டுவதற்கு நடையியல் மற்றும் கதை உரைப்பியலைக் கையாளுதல் மேலோங்கி வருதலைத் தனித்தனி ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சமகாலத்தைய உலகம் தழுவிய பொதுப் பண்பாக இது காணப்படும் நிலையில் அதனை ஈடுசெய் வதற்கு **"பின்னைய மானிட இலக்கியம்"**– என்ற தொடர் பயன்படுத் தப்படுகிறது. விரைந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சி, தொடர்பாடற் பிரளயம், வேகமாக மாறி வரும் நுகர்ச்சிக் கோலங்கள், மனித உடல் பொறியுடலாக (Cyborg) மாற்றப்படுதல் என்ற நிலவரங்கள் இலக்கியப் புனைவுகளில் செல்வாக்குகளை ஏற்படுத்தத் தொடங் கியுள்ளன.

பொறியுடலை முதன்மைப்படுத்தும் புனைகதையாக்கங்கள் விரைந்து வளர்ச்சியுற்று வரும் இன்றைய சூழலில் அந்த எண்ணக்கருவை விளங்கிக் கொள்ளல் அவசியமாகிறது. மனித உடலையும் செயற் கைப் பொறிகளையும் ஒட்டுணைப்புச் செய்த உடலே பொறியுடல் என அழைக்கப் படுகிறது. பின் நவீனத்துவத்தின் அடையாளமாகப் பொறியுடலைக் குறிப்பிடும் திறனாய்வாளரும் இருக்கின்றனர்.

பொறியுடல் மரபு வழியான இருமைத் தன்மைகளை நிராகரிக்கிறது. அதாவது இயற்கை/செயற்கை, மனிதன்/மனிதம் அற்றவை என்ற கறாரான வேறுபாடுகள் தகர்க்கப்படுகின்றன. மனித உடலின் உள்ளே செயற்கை உறுப்புக்கள் வைக்கப்படுகின்றன. விற்பனைப் பண்டங்களாக மாறிவருகின்றன.

இவை பின்னைய மானிட இலக்கியங்களுக்குக் கருப்பொருளாக ஆகின்றன. இதேவேளை வளர்முக நாடுகளில் மனித அவலங்கள் தீவிரமடையத் தொடங்கியுள்ளன. வறுமை எல்லையின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, பொருண்மிய நிலையிலும் - இனத்துவ நிலையிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் பறிப்பும் - சுரட்டலும், நவீன மருத்துவ வசதிகளும் - கல்வி வசதிகளும் கீழ் வாழ்வோருக்குக் கிடைக்கப் பெறாதிருத்தல் முதலியவை மேலோங் கத் தொடங்கியுள்ளன. அதேவேளை இம்மக்களைத் தொடர்பு சாத னங்கள் தமது "எண்ம வெளியில்"– (Digital Space) சிக்கவைப்பதற் குரிய "அகல்விரி"– முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில் பின்னைய மானிட இலக்கியம் மேட்டுக் குழுவினரின் புளகாங்கிதத்துக்குரிய புனைவுகளையும், கருத்தாடல்களையும் முன் னெடுத்து வருதல் குறிப்பிடத்தக்கது.

பின்னைய முதலாளியத்தைக் குவியப்படுத்தி, "இல்லா இடங்கள்"– என்ற எண்ணக்கருவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. "இல்லா இடங்கள்"– (Non Places) என்ற எண்ணக்கருவை பிரெஞ்சு மானிடவியலாளராகிய "மார்க் அகே"– (Marc Auge) அறிமுகம் செய்- துள்ளார். ஒவ்வொருவரும் தத்தமக்குச் சொந்தமில்லா இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. ஓடும் வண்டி, தொழில் நிலையம், பொழுது போக்கிடம், அங்காடி என்றவாறு தமக்குச் சொந்தமில்லா இடங்களில் வாழ்க்கை கழிந்து கொண்டிருக்கிறது. இதனை அடியொற்றி, "புதிய"– அந்நியமப்பாடு என்ற இடர்களுக்குள் மனிதர் சிக்கி வாழும் புதிய தோற்றப்பாடு மேலெழத் தொடங்கியுள்ளது. இவற்றை மேலும் திரிவுபடுத்துகின்ற கலை, இலக்கிய ஆக்கங்கள் மானிட வஞ்சிப்புக்குத் துணை போகின்றன.

இல்லா இடங்களின் புதிய வளர்ச்சி, தமது வாழ்விடங்களை இழந்து வாழ்தலும், தாம் வாழ்ந்த நாட்டை இழந்து புலம் பெயர்ந்து வாழ்தலுமாகும். இவற்றை அடியொற்றி எழும் கலை, இலக்கிய வகைகளில் இருமைப்பாடுகள் இடம்பெறுகின்றன. இவற்றில் ஒருவகை **"தூய வெளிப்பாடுகளாக"**– (Pure Expressions) க் காணப்படுகின்றன. அதாவது, அடிநிலை வெளிப்பாடுகளை இலக்கிய வழியாக அடையாளப்படுத்தாத மேலெழும் பூச்சுக்களாக அவை முகிழ்கின்றன. அதேவேளை அடிநிலை அடையாளப்படுத்தலைக் கலை வீச்சுக்குள் கொண்டு வரும் ஆக்கங்கள் **"ஆழ்நிலை வெளிப்பாடுகள்"**– எனப்படும். சமகால இலக்கியங்களை நோக்கு வதற்குரிய புலக் காட்சியை இவ்வகைப் பாகுபாடு தோற்றுவிக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் **"பெருங்காலனியம்"**– **"சிறு காலனியம்"**– என்ற இருவகை எண்ணக்கருக்களையும் விளங்கிக் கொள்ளல் நவீன இலக்கியப் புலப்பாடுகளுடன் தொடர்புபட்டு நிற்கிறது. கோளமய மாக்கலை வலியுறுத்திப் பெரும் இலாபமீட்டற் செயற்பாட்டுடன், இயங்கிவரும் பெரும் காலனிய நடவடிக்கைகள் புதிய எழுகோ லங்களை உள்ளடக்கிய தூய வெளிப்பாடுகளைக் கலை, இலக்கிய ஆக்கங்களிலே ஊக்குவித்து வருகின்றன. பெருங்காலனித்துவத் துடன் இணைந்து தொழிற்படத் தொடங்கியுள்ள சிறுகாலனியம் வளர்முக நாடுகளிலே பல்வேறு மக்கள் எதிர் நடவடிக்கைக ளையும், திணிப்புக்களையும், இன ஒடுக்கங்களையும் மேற்கொண்டு வருதல் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான புதிய முரண்பாடுகள் வளர்முக நாடுகளிலே வளமானதும், கனதியானதுமான இலக் கியங்கள் அடிமட்டங்களிலே தோற்றம் பெறுவதற்குரிய களநில வரங்களை உருவாக்கி வருகின்றன. இந்தப் புதிய வளர்ச்சி புதிய மானிடவாதத்தால் கண்டறியப்படாத நடப்பியலுக்கு வெளிச்சம் வரத் தொடங்கியுள்ளது.

தென்றலின் தொடர் வருகைக்கு தங்களால் இயன்ற அன்பளிப்புக்களை அனுப்பி வையுங்கள்.

– ஆசிரியர் –

மறைந்தும் மறையாத அறிவிப்பாளர் எஸ்.சண்முகரெத்தினம்!

–பழுவூரான்–



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் செய்திவாசிப்பாளராக அறிமுகமாகி, அதன் பின்னர் பல்வேறு நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கி சாதனை படைத்தார் சிரேஷ்ட அறிவிப்பாளர் எஸ்.சண்முகரெத்தினம். எஸ்.சண்முகரெத்தினம் யாழ். பொன்னாலையில் 1948 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டதாரியாகி, கொழும்பு குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தில் வேலை செய்தார். ஆனாலும் ஒலிபரப்புத் துறையின் மீது இருந்த ஆர்வம் காரணமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர அறிவிப்பாளரானார்.

இவற்றைவிட நேர்காணலிலும் தனது அதீத ஆற்றலை வெளிப்படுத்தினார். ஆனால் 12 ஆண்டுகளே அவர் ஒலி, ஒளிபரப்புத் துறையில் பணியாற்றினார்.

இந்நிலையில் அன்னாரின் இழப்பு ஊடகத் துறைக்குப் பேரிழப்பாகும். இவருக்குத் **"தென்றல்"**- தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

-சமையல் குறிப்பு-

க்ரில்ட் வெண்டிக்காய்!

-த.செல்வராணி-

தேவையான பொருட்கள்



- வெண்டிக்காய் - 300கிராம்
- மிளகாய்த்தூள்- ஒரு தேக்கரண்டி
- உப்பு – தேவையான அளவு
- மஞ்சள் பொடி – 1/4 தேக்கரண்டி
- கேசரிப் பொடி- சிறிது
- பெருங்காயப் பொடி- 1/4 தேக்கரண்டி
- எண்ணெய்- 2 மேசைக் கரண்டி

செய்முறை

- வெண்டிக்காயின் அடிப்பகுதியை நறுக்கிவிட்டு, நீளவாக்கில் வெட்டிப் பின்னர் 1 இன்ச் நீளத்துக்கு இரண்டாக நறுக்கவும்.

- முதலில் எண்ணெய் சேர்த்துப் பிசறி, மற்ற அனைத்துப் பொருட்களையும் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.

- ஓடிஜியில் ட்ரேயை சூடுபடுத்தி, மசாலா தடவிய வெண்டிக்காயைப் பரவலாக வைத்து, மொறுமொறுப்பாகும் வரை வேக் செய்யவும்.

புதிய வரவுகள்

நூல் :- **அண்மையில் அரும்பிய அரும்புகள்**
ஆசிரியர் :- **உடப்பூர் வீரசொக்கன்**
விலை :- **ரூபாய் 300.00**
வெளியீடு :- **இளம் தாரகை வட்டம்**



உடப்பு பிரதேசத்தின் சிறப்புக்களை ஊரறிய - உலகறிய - நாடறியச் செய்வதில் கலைஞனாக, எழுத்தாளனாக, பத்திரிகையாளனாக, விமர்சகராக, ஆன்மீக வாதியாக, சொற்பொழிவாளராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலை வெளிக் கொணர்ந்து கொண்டிருக்கிறார் உடப்பூர் வீரசொக்கன். இந்நூலில் முப்பது நூல்களின் விமர்சனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்விமர்சனங்கள் நடுநிலையாக எழுதப்பட்டிருப்பது நோக்குதற்குரியது.

நூல் :- **தீ நிலம்**
ஆசிரியர் :- **மீரா முகையதீன் ஜமால்தீன்**
விலை :- **ரூபாய் 100.00**
வெளியீடு :- **வாசிப்பு வட்டம், ஏறாவூர்-03**

இந்நூலில் பாலஸ்தீனத்தில் மரண அச்சத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கையைப் பாடு பொருளாகக் கொண்டு கவிதைகள் புனையப்பட்டுள்ளன. தாய்நாட்டின் மீதான காதல், துணிவு, எதிர்ப்புணர்வு முதலான பண்புகளை சுமந்த வண்ணம் "தீ நிலம்"– முழுப்பிரசவமாக வெளிவந்துள்ளது.

5 கேள்வி பதில் இல 14

1. கோறளைப்பற்றுப் பிரதேச சபை தவிசாளர் யார்?
2. உலக எயிட்ஸ் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
3. விபுலானந்த அடிகளார் பிறந்த ஊர் எது?
4. தேசிய விளையாட்டு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
5. பௌத்தர்களின் வழிபாட்டிடம் எது?

விதிகள்

1. இப்போட்டியில் சகலரும் பங்கு கொள்ளலாம்.
2. பங்குபற்றுவோர் கீழ் உள்ள கூப்பனில் விடைகளை எழுதி, ஆனி 28ஆம் திகதிக்கு முன்னர் "கேள்வி 5 பதில்"– 14, "தென்றல்" 44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு- எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
3. கூப்பன் இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.
4. வெற்றி பெறுவோர்களுக்கு முதல் பரிசாக 500/= வும், இரண்டாம் பரிசாக 250/= வும், மூன்றாம் பரிசாக 100/= வும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

---

5 கேள்வி — 5 பதில் இல -14 விடைகள்

1.

2.

3.

4.

5.

பெயர்:-.....

முகவரி:-.....

.....

5 கேள்வி பதில் இல 13

விடைகள்

1. மே 10
2. டலஸ் அழகப்பெரும
3. திரு எஸ்.மகேந்திரலிங்கம்
4. 30
5. திருக்குறள்

பரிசில் பெறுவோர்

முதலாம் இடம்

என். சண்முகப்பிரியா
கூமாங்குளம்.
வவுனியா.

இரண்டாம் இடம்

ப.தமிழ்நிலா
திருப்பழுகாமம் -01,
பெரியபோரதீவு.

மூன்றாம் இடம்

ந.கவிதா
பாண்டிருப்பு-01,
பாண்டிருப்பு.

பாராட்டுப் பெறுவோர்

1. வ.உமாப்பிரபா - வவுனியா
2. ந.சங்கீத் - கல்முனை.
3. அ.அமர்நாத் - திருக்கோவில்
4. ம.உதயநிலா - வாழைச்சேனை.
5. க.பிரியவதனி - மண்டூர்.

வாசகர் நெஞ்சம்

உன் பணி தொடரட்டும்...

"தென்றல்"– (தை– பங்குனி) -2020 இதழ் என் கரம் கிடைத்தது. மிக்க நன்றி. அதிதிப் பக்கத்தில் கவிஞர் செ.குணரத்தினம் தொடர்பான பல அரிய தகவல்களை வெளிக்கொணர்ந்திருந்தமை பாராட்டுக்குரியது. இவர் கவிஞர் என்பதற்கு மேலாக அவரது ஈடுபாடு சிறுகதை, பாடல் இயற்றல், சமூகப் பணிகள் போன்ற பல விடயங்களையும் தந்திருந்தது அவரது முழுமையான ஆளுமை யைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது எனக்கூறினால் அது மிகையாகாது. அதே போலவே நீத்தார் நினைவில் அமரர் தொல்லியல் ஆய்வாளர் தங்கேஸ்வரி கதிர்காமர் பற்றிய குறிப்பும், உடப்பூர் வீரசொக்கனின் அறுவாய் சிறுகதையும் சிறப்பாக இருந்தன. மேலும் திருமதி நிலாந்தினி செந்தூரன் எழுதிய கதிர-வெளி மக்களின் வாழ்வியலும், தொல்லியல் அம்சங்களும் கட்டுரை அறிவுத் தேடலுக்கு வலுச் சேர்த்தது. இந்நிலையில் "தென்றல்"– மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

த.மன்மதராசா,
அக்கரைப்பற்று.

"தென்றலே"– நீடுழி வாழ்க!!!

மட்டக்களப்பிலிருந்து "தென்றல்"– எனும் நாமத்தில் சஞ்சிகை யொன்று வெளிவருவது கண்டு மகிழ்வடைந்தேன். கடந்த சுகந்தம் - 44 இதழைப் படிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் இடம்பெற்ற அம்சங்கள் யாவும் தேன் போன்று மிகவும் இனி மையாகவும், கவர்ச்சியாகவும் சுவையாகவும் இருந்தன.

அ.நர்மதா,
கிராஞ்சுளம்.

ஆரையம்பதியில்.....

அழகிய 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்ய வேண்டிய ஒரே இடம் தங்க நகைகள் சொர்க்காபுரி

அபிராமி ஜுவல்ஸ்

பிரதான வீதி,
ஆரையம்பதி – 02
தொ.பே: 065-2245944
077-6506329

AD/0038

அழகிய 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்ய வேண்டிய ஒரே இடம் தங்க நகைகளின் சொர்க்காபுரி

சொர்ணம் நகை மாளிகை

16, புனித அந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152

212, 214 பிரதான வீதி, கல்முனை.
T.P: 067 2229121/2229860

59, மட்டக்களப்பு வீதி, கல்முனை.
T.P: 067 2220191

182, பிரதான வீதி, காருவாஞ்சிகுடி.
T.P: 065 2250182

AD/0040

LADSHANA

STAMP & DIGITAL PRINTING

39A, Bally Road, Arasady, Batticaloa.
065 2224048, 077 6915574
ladshana@gmail.com

AD/0024

Rubber Stamps | Digital Printing | Laser Cutting & Engraving
Digital Offset | Plastic ID | T.Shirt (Print, Emproding) | Shield
Mug (Personalized Gift Printing) | Photo Frame | Name Board
Medals | Key Tag | Granite Letter Engraving | School Badges Est.

இவ்வருடம் Scholarship பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான...

Spoken English Classes

ஆங்கிலம் கற்பது ஒரு சுவாரசியமான உற்சாகமூட்டக்கூடிய செயலாக அமைவது முக்கியமானதாகும். ஆங்கிலத்தில் உரையாடுதலும், அம்மொழியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதும் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்விற்கான அத்திவாரமாக அமையும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கு அமைய சிறுவயதிலிருந்து ஆங்கிலம் கற்பவர்களின் ஆங்கில உச்சரிப்பு சிறந்ததாக அமைவதுடன் சிறந்ததொரு அடிப்படை அறிவையும் பெற்றுக்கொள்கின்றனர். Headwayயில் சிறுவயதிலிருந்து பெற்றுக் கொள்ளும் ஆங்கில அறிவு அவர்கள் பெரியவரானதும் அவர்கள் சார்ந்த துறைகளில் சிறந்து விளங்க உறுதுணையாக அமைவதை நாங்கள் கண்கூடாக அறிந்து வருகிறோம்

- ✓ Once a week class
- ✓ Activity based learning
- ✓ Maximum 20 students in a class
- ✓ Special discounted course fee
- ✓ Experienced teacher panel
- ✓ Chance to sit for Cambridge exams in 2020

Register Now

Headway
School of Languages

AD/0006

12, Thamaraikerny Road, Arasady, Batticaloa T: 065 492 4042 | 065 222 5612